
Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 09 (13.01.2003) திங்கட்கிழமை இதழ் : 104

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் - thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்
Better place
for your Children
(சி-474)



## வட – கிழக்கைப் புனரமைக்க ஜப்பான் அரசு வெகு ஆர்வம்

### பாலா - அகாஷி பாங்கொக்கில் சந்திப்பு






(பாங்கொக்)

இலங்கையில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட தூதுவர் யசுஷி அகாஷியும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் நேற்று தாய்லாந்தில் விரிவான சந்திப்பொன்றை நடாத்தினர்.

பாங்கொக்கிலுள்ள நொவேரல் ஹோட்டேலில் நேற்று மாலை ஆறு மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு ஒரு மணிநேரமாக நடைபெற்றது.

தற்போதைய சமாதான முயற்சிகளும், ஜப்பானிய உதவிகளும் பற்றி முக்கியமாக ஆராயப்பட்ட இச்சந்திப்பில் - நடந்து முடிந்த நான்காம் கட்டப் பேச்சுக்களில் இடம்பெற்ற விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டது. இச்சந்திப்பில், வட - கிழக்கில் புனரமைப்புத் திட்டங்களுக்கான ஜப்பானிய உதவி பற்றிய விடயங்கள் (10ஆம் பக்கம் பார்க்க)

## கேணல் கிட்டு 10 ஆம் ஆண்டு நினைவு மூன்று நாட்கள் எழுச்சி நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

மூத்ததளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பத்தாம் ஆண்டு நினைவாக மூன்று நாள் எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 14, 15, 16 ஆம் திகதிகளில் மேற்படி நினைவு நிகழ்வுகள் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் இவ் எழுச்சி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மேற்படி நினைவு நிகழ்வுகளின் முக்கிய அம்சமாக, யாழ்: கிட்டுப் பூங்கா மற்றும் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலிலும் தீருவில் திடலிலும் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. விசேடமாக, கிட்டு பூங்காவில் புகைப்படக் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் கூடுமிடங்களில் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு, கேணல் கிட்டு (10ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 3,500 வீடுகளில் படையினர்!

### விண்ணாணம் விநாசியார்



உதெல்லாம் வெளிச்சால்தானே
சனத்துக்கு நிம்மதி கிடைக்கும்...

## வெறுமையாக வீடுகள் எதுவுமில்லை; அரச அதிபர் அறிக்கை கொடுத்தார்

(நமது நிருபர்)

**யாழ்ப்பாணக் குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே மூவாயிரத்து ஐந்நூறு வீடுகளிலும் 52 கடைகளிலும் அரச படையினர் தங்க' யிருப்பதாக யாழ்.அரசஅதிபர் செ.பத்மநாதன் அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மக்களற்ற வெறுமையான, வீடுகள் எதுவும் இப்பகுதியில் இல்லையென்றும் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையிலேயே அரச அதிபர் இந்த விபரங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே எந்தவொரு வீடும் வெறுமையாக இல்லை. இப்பிரதேசத்தில் 3,500 வீடுகளிலும் 52 கடைகளிலும் படையினர் தங்கியிருப்பதால், இங்கு மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது என அரச அதிபர் சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இதேவேளை - உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே 50 ஆயிரம் வீடுகள் வெறுமையாக இருப்பதாக (10ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிபர் சொல்லுவது மெய்யா? சோதனை செய்கிறது இராணுவம்!

யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே எந்தவொரு வீடும் வெறுமையாக இல்லை என அரச அதிபர் அரசாங்கத்துக்கு வழங்கிய அறிக்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே, இராணுவத்தினர் வீடுவீடாகத் தகவல் சேகரிப்புப் பணியை மேற்கொண்டு வருவதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் வீடுவீடாகச் சென்று படையினர் தகவல் திரட்டி வருகின்றனர். இது தொடர்பாகத் தகவல் வெளியிட்டபோதே படை வட்டாரங்கள், அரச அதிபரின் மதிப்பீட்டை உறுதிப்படுத்தவே தாம் கணக்கெடுப்பில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்தன.

## தமிழகஅகதிகளை அழைத்துவர கிளிநொச்சியில் நாளை விசேட கூட்டம்

தமிழகத்தில் உள்ள தமிழ் அகதிகள் தாயகம் திரும்பி மீளக் குடியமர்வது தொடர்பான விசேட கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளும், இலங்கை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளும் (10ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா என்னை அனுப்பவில்லை என்கிறார் சதீஸ் நம்பியார்!



குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இலங்கை அரசாங்கமே தன்னை நியமித்துள்ளதாகவும், இந்திய அரசாங்கம் தன்னை நியமிக்கவில்லை என்றும் இந்திய இராணுவ அதிகாரி லெப். ஜெனரல் சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ளார்.

இவர் பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது,

இந்த விவகாரம் குறித்து விரிவாக என்னால் கூற முடியாது. சரி (10ஆம் பக்கம் பார்க்க)


## தமிழ்ச்செல்வன் குழுவினர் வன்னிக்கும் கருணா மட்டக்களப்புக்கும் திரும்பினர்

தாய்லாந்தில் நடைபெற்ற நான்காம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சி திரும்பினர்.

கொழும்பில் இருந்து சிறிலங்கா வான்படையின் உலங்குவானூர்தி மூலம் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகச் செயலர் புலித்தேவன், அலெக்ஸ், தொல்காப்பியன் ஆகியோர் நேற்றுக்காலை 8.15 மணியளவில் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினார்கள். (10ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் இந்தியா தலையிடாது இலங்கை கேட்கும் உதவிகளை வழங்கும்!

### இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவிப்பு



இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியாவிற்கு தலையிட வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், இலங்கையுடனான இந்தியாவின் ராஜதந்திர உறவு நீடித்து நிலைக்கக்கூடிய வகையில் இலங்கை அரசாங்கம் கேட்கும் உதவிகளை இந்தியா வழங்கும் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்.

தாய்லாந்துப் பேச்சுவார்த்தையை முடித்துக்கொண்டு புதுடெல்கிக்குச் சென்ற அமைச்சர் மிலிந்த மொறகொடவைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே, அவர் இதனைத் தெரிவித்தார். அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைத் தீர்விற்காக விடுதலைப் புலிகளுடன் தாய்லாந்தில் நடத்திய நான்காம் சுற்றுப்பேச்சுவார்த்தையின் விபரங்களை தன்னிடம் அமைச்சர் மிலிந்த மொறகொட விளக்கிக்கூறியதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலமைகளை இந்தியா அவதானித்து வருகின்றது. ஆனால், ஆலோசனை வழங்கவோ அல்லது தலையிடவோ இந்தியா ஒருபோதும் விரும்பாது (10ஆம் பக்கம் பார்க்க)

# சீன நிலக்கரிச் சுரங்கங்களில் தொடரும் பாரிய விபத்துக்கள்!

## இரு நாட்களில் 40 பேர் காணாமற்போயினர்; எண்மர் பலி!

(பெய்ஜிங்)

சீனாவில் நிலக்கரிச் சுரங்கங்களில் தொடராக நிகழ்ந்து வரும் விபத்துக்களிலும், வெடிச்சம்பவங்களிலும், இரு நாட்களில் மட்டும் 30 தொழிலாளர்கள் காணாமற்போனதோடு எண்மர் பலியாகியிருக்கின்றனர்.


சீன சுரங்கத் தொழிலாளர்கள்.

வடசீனாவிலுள்ள ஹெய்லோன் யாங் மாகாணத்தின் தலைநகர் ஹார்பினுக்கு அருகேயுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்றுமுன்தினம் நடந்த தவறுதலான வெடிவிபத்தில், இறுதியாக 40 பேர் காணாமற்போயுள்ளனர்.

இதற்கு முன்னர் வெள்ளியன்று நடந்த விபத்தொன்றில் எட்டுத் தொழிலாளர்கள் கற்பாறைக்குள் சிக்குண்டு நெரிபட்டு பரிதாபகரமாக மரணமாகினர்.

இந்த விபத்துக்கு நிலத்தினுள் அடங்கியிருந்த இயற்கை எரிவாயுவின் திடீர் தீப்பற்றுதலே காரணமென முதற்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டபோதும், உண்மையான காரணம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

சீனாவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்கள் போதியளவு தற்காப்பு முறைகளைப் பின்பற்றுவதில்லை என்ற குற்றச்சாட்டு சர்வதேச அளவில் வலுப்பெற்று வருகின்றபோது - இந்த விபத்துக்கள் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அழகிய அமேஸன் காட்டில் அகோரமான விமான விபத்து!

## 46 பயணிகளுமே பலியானதாக உறுதிசெய்யப்பட்டது

அடர்ந்த அமேஸன் காட்டுப் பகுதியில் வீழ்ந்து நொருங்கிய பெரு நாட்டு விமானத்திலிருந்த 46 பயணிகளும் உயிர்பிழைத்திருக்க வாய்ப்பேயில்லை என மீட்புப் பணியாளர்கள் அறிவித்துள்ளனர்.

பெருவின் போக்குவரத்து அமைச்சர் ஜாலியர் ரீற்றேகை இதனை உறுதிசெய்தார்.

நொருங்கிய விமானத்திலிருந்தவர்களின் சடலம் 400 மீற்றர் சுற்றளவுக்கு சிதறுண்டு கிடப்பதாகவும்- மலைப்பாங்கான அப்பகுதிக்குள் தரையிறங்க முடியாதளவு கடும் மழை பெய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகவலம்


சோகமே உருவாக மீட்புப் பணியாளர்கள்.



உலகின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் பிரதானமான அமேஸன் பகுதிக்குள் விழுந்த இந்த விமானத்தில் எட்டுச் சிறுவர்களும் இருந்தனர். விபத்து நடந்த பகுதியில் கணுக்காலளவு சதுப்பு நிறைந்திருப்பதாகவும் சடலங்கள் அதனுள் புதையுண்டிருப்பதாகவும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

மலைகள் சூழ்ந்த இயற்கை அழகுமிக்க சுற்றுலாப் பிரதேசமான இப்பகுதிக்கு அதிகளவில் உல்லாசப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

ஆனாலும் - கடுமையான மழை இவர்களுக்கு யமனாகவும் மாறி வருகிறது. 1987 ஆம் ஆண்டில் கூட இப்படியான கடும் மழைக்குள் சிக்கிய விமானமொன்று மலையொன்றுடன் மோதிச் சிதறியதில் 46 பேர் கொல்லப்பட்டனர்.


கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும்
6 மாத டிப்ளோமா பயிற்சிநெறி

- கேக் ஐசிங்
- கைவேலை
- உணவு தயாரித்தல்
- உடை தயாரித்தல்
- பூ வேலை
- FABRIC PAINTING

- மேற்படி பயிற்சிகள் அனைத்தையும் பயில்வோருக்குக் கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் என்பன இலவசமாகப் பயிற்றுவிக்கப்படும்.
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப்பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.

கிழமை நாள் பயிற்சிகள்
காலை 9.30 மணிமுதல் பி.ப. 1.30 மணிவரை
திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் நடைபெறும்.
ஆரம்பம்: 20-01-2003

சனி, ஞாயிறு பயிற்சிகள்
காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை நடைபெறும்.
ஆரம்பம்: 19-01-2003

மேலும் விபரங்களை பிற்பகல் 2.00 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

(சி-476) - இயக்குநர்.



சிறு விளம்பரம்

**ஆங்கிலம்**

பல வருடங்கள் உயர்கல்வி நிலையங்களில் கடமைபுரியும் ஆங்கில ஆசிரியரினால் A/L 2003 ENGLISH PAPER CLASS. ஆரம்பம் தை 15 இல். தொடர்பு: 33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு), யாழ்ப்பாணம். (100)

**பல் கட்டுதல்**

பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் நல்ல முறையில் நியாயமான விலையில் மேற்கொள்ளவும், கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளை பெறவும் முடியும். (மொறாயஸ்), ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம்.(சி-456)

நிரஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

சூர்யா, லைலா, சினேகா நடித்த

உன்னை நினைத்து

வெள்ளி, சனி, ஞாயிறு

இரவு 8.45 மட்டும் SPIDER MAN

(சி/397)

ராஜா

யாழ்ப்பாணம்.



முரளி, ராதிகா

சௌந்தரி,

வடிவேல், மணிவண்ணன், வடிவேல்

சுந்தரா ட்ராவல்ஸ்

10.30, 2.30, 6.00

15 முதல்

விஜய், ஸ்நேகா,

வசீகரா

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்து கொள்ளவும்.

(சி-398)


# செய்திப் படங்கள்


வறுமையில் வாழும் பங்களாதேஷ் பெண்களும், சிறுவர்களும் - அந்நாட்டின் இஸ்லாமிய மாணவர் அமைப்பினால் விநியோகிக்கப்படும், பனிக்குளிரைத் தடுக்கவல்ல உடுபுடைவைகளைப் பெறுவதற்காகத் தலைநகர் டாக்காவில் வரிசையில் நிற்கின்றனர். அதிகரித்து வரும் பனிக்குளிரினால் கடந்த சில நாட்களாகக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான பொதுமக்கள் அங்கு பலியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.


ஈராக்கில் ஆயுதப் பரிசோதனையில் ஈடுபட்டு வரும் ஐ.நா. கண்காணிப்பாளர்கள் - சோதனையிட்ட எண்ணெய்க்குதமொன்றிலிருந்து ஹெலிகொப்ரரில் ஏறுவதற்காக புழுதியூடு விரைந்து செல்கின்றனர்.


ஈராக்கின் மீதான யுத்தமேகங்கள் திரளும் வேளையில் தலைநகர் பாக்தாத்திலுள்ள ஆயுத விற்பனைக் கடையொன்றில் ஈராக்கியர் ஒருவர்- தனது தேவைக்குரிய ஆயுதமொன்றைத் தெரியும் பணியில் ஈடுபடுகின்றார்.

# இன்றைய நாள் இனிய நாள்

**13-01-2003 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- நெஞ்சுச் சளி, இரத்த காயம், பிரயாணத்தால் நன்மை, பொருள் வரவு. |
| இடபம் | :- தேக ஆரோக்கியம், புத்திக்குறைவு, பெண்களால் அவமானம். |
| மிதுனம் | :- பொருள் கைவிட்டுப் போதல், புதிய அனுபவம், நன்முயற்சி. |
| கர்க்கடகம் | :- திரவிய இலாபம், மனச் சஞ்சலம், அதிக பிரயாசை, இடையூறு. |
| சிங்கம் | :- நிலையான வாழ்க்கை, ஏமாற்றப்படுதல், மனக்கவலை. |
| கன்னி | :- பொருள்வரவு, லட்சுமி கடாட்சம், குடும்பசுகம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- தேகசுகக்குறைவு, உற்சாகமின்மை, பிரயாண நஷ்டம். |
| விருச்சிகம் | :- காரியசித்தி, தொழில் வெற்றி, அதிக இலாபம், தேகசுகம். |
| தனு | :- மனக்குழப்பம், காரிய தாமதம், உஷ்ணரோகம், வீண் அலைச்சல். |
| மகரம் | :- குடும்ப மகிழ்ச்சி, தொழில் விருத்தி, பிரயாணத்தால் நன்மை. |
| கும்பம் | :- அரச பயம், சத்துருபீடை, உடற்சோர்வு. |
| மீனம் | :- திரவிய இலாபம், குடும்பச் சிறப்பு, தேக ஆரோக்கியம், சந்தோஷம். |

# பெரும்பாலான இலங்கை அகதிகள் திரும்பிச் செல்ல விரும்புகின்றனர்

## தமிழக அகதி முகாம்களை பார்வையிட்ட இந்திய அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள பெரும்பாலான இலங்கைத் தமிழ் அகதிகள் மீண்டும் தாயகம் திரும்பிச் செல்ல விரும்புவதாக இந்திய உள்துறை இணை அமைச்சர் வித்தியாசாகர் ராவ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இவர், தமிழகத்திலுள்ள மண்டபம் அகதி முகாம் உள்ளிட்ட பல அகதிமுகாம்களைச் சுற்றிப் பார்வையிட்டு, அங்குள்ள இலங்கை அகதிகளிடம் கலந்துரையாடினார்.

இதன் பின்னர், சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியபோதே மத்திய உள்துறை அமைச்சர் வித்தியாசாகர் ராவ், பெரும்பாலான இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பிச்செல்ல விரும்புவதாகத் தம்மிடம் தெரிவித்ததாகக் கூறினார்.

தாம் தாயகம் திரும்பிச் செல்லும்போது, இந்தியாவில் பிறந்த தமது பிள்ளைகளையும் அழைத்துச் செல்ல வேண்டியிருப்பதாகவும், இது தொடர்பான பதிவுகள் போன்ற நிர்வாகப் பணிகளை இந்திய அரசு நிறைவேற்றித் தரவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்ததாகவும், மத்திய உள்துறை இணை அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகளின் நலன் மற்றும் பராமரிப்புக்களுக்காக இந்திய அரசாங்கம் வருடாந்தம் 300 கோடி ரூபாவைச் செலவிட்டு வருவதாகத் தெரிவித்த வித்தியாசாகர் ராவ் -

வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்குக் கிடைக்கும் தொண்டர் அமைப்புக்களுக்கான நிதியுதவியைப் பெறும் மாநிலங்களில் தமிழகமே முதலிடத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திரும்பவும் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பது குறித்த எந்த அறிவிப்பையும் அவர் விடுக்கவில்லை. முன்னதாக, அமைச்சர் வித்தியாசாகர் ராவ் இலங்கைத் தமிழ் அகதிகள் தாம் விரும்பினால் நாடு திரும்பலாம் எனத் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

# அரசு சரியான முடிவு எடுக்கா விட்டால் புலிகளின் தந்திரத்துக்குள் மூழ்க நேரிடும்

## வட-கிழக்கு சிங்கள அமைப்பு தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களின்போது, அரசாங்கம் சரியான முடிவுகளை எடுக்காவிட்டால் நாம் புலிகளின் தந்திரோபாயத்துக்குள் மூழ்கிவிட வேண்டிய நிலை ஏற்படுமென்று வட - கிழக்கு சிங்கள அமைப்பின் தலைவரான சுனில் அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

வட - கிழக்கு சிங்கள அமைப்பு என்ற அமைப்பின் ஆரம்ப வைபவம் தம்ம வித்தியா பவுண்டேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வட - கிழக்குப் பகுதிகளிலுள்ள சிங்கள மக்கள் அமைதியின் பெயரால் அலட்சியப்படுத்தப்படுவதை ஏற்க நாம் தயாராக இல்லை.

சமாதானப் பேச்சுக்கள் நடக்கின்றபோதும், வட-கிழக்குப் பகுதிகளில் வாழும் சிங்கள மக்கள், புலிகளின் ஆதிக்கத்திற்குட்பட்டு வருகின்றனர்.

அனைத்து நிர்வாகமும் புலிகளின் கைகளிலேயே இருக்கின்றன. இந்நிலை தொடர்ந்தால் நாமும் புலிகளின் நிர்ப்பந்தங்களுக்குப் பலியாக நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார்.



அண்மையில் யாழ். வந்திருந்த 'கவிக்கோ' அப்துல் ரகுமான் யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது, பீடாதிபதி மற்றும் விரிவுரையாளர்கள், ஆசிரிய பயிலுநர்களுடன் எடுத்துக்கொண்ட படம்.

# அமெரிக்காவில் பயிற்சி பெற 19 பொலிஸ் அதிகாரிகள் பயணம்

(கொழும்பு)

குற்றச் செயல்கள் மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளை தடுப்பது மற்றும் முறியடிப்பது தொடர்பான பயிற்சிகளைப் பெறுவதற்காக 19 உயர் பொலிஸ் அதிகாரிகள் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் லூசியானா மாநிலத்தில் குற்றச் செயல்கள் மற்றும் திடீர்த் தாக்குதல் முயற்சிகள், பணய நடவடிக்கைகள் என்பனவற்றைத் தடுப்பது மற்றும்அவற்றை முறியடிப்பது போன்ற பயிற்சிகளில் இந்தப் பொலிஸ் குழுவுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

அமெரிக்காவில் பயிற்சி பெறுவதற்காக இந்தப் பொலிஸ் குழு கடந்த வெள்ளியன்று கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றது. இக்குழுவில், நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களும், பத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களும், ஐந்து உதவிப பொலிஸ் அத்தியட்சகர்களும் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் பயிற்சி முடிந்து நாடு திரும்பியதும் மாவட்ட ரீதியாகப் பொலிஸாருக்கு பயிற்சிகளை வழங்கவுளளனர்.

## பொதுநலவாயப் புத்திரிகையாளர் சங்க

# வருடாந்த மாநாடு கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறும்

(கொழும்பு)

பொதுநலவாயப் பத்திரிகையாளர் சங்க மாநாடு, அடுத்த மாதம் 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

இவ் வருடாந்த மாநாட்டில் பிரித்தானிய நாடாளுமன்ற முன்னாள் சபாநாயகர் பரோனஸ் பெற்றி பூத்ரொயிட் உட்படப் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இம் மாநாட்டை பொதுநலவாய அமைப்பின் செயலாளர் டொன் மக்கினொன், உத்தியோகபூர்வமாக தொடக்கி வைப்பார்.

இந்த மாநாட்டில் இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ ஆகியோர் விளக்கமளிக்கவுள்ளனர்.

இம்மாநாட்டுக்கு வரும் பத்திரிகையாளர்களுக்கு - பிரதமர், அலரி மாளிகையில் இராப்போசன விருந்து வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளார்.



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில், விவசாயபீட தகவல் தொடர்பு மையம் நடாத்திய இலவச நல்லின தென்னம் நாற்றுகள் வழங்கும் நிகழ்வில் அதிதியாகக் கலந்துகொண்ட விவசாயபீட பீடாதிபதி சு.இராஜதுரை, சனசமூக நிலையத் தலைவருக்கு முதல் நாற்றை வழங்குகிறார்.

## 14 பிரதேசங்களில் 24 மணிநேர மின் விநியோகம்

வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் உள்ள 14 பிரதேசங்களுக்கு இம்மாத இறுதிக்குள் மின்னிணைப்புக்கள் வழங்கப்பட்டு 24 மணிநேரம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இப்பகுதிகளில் 14 மின்மாற்றிகள் பொருத்தப்பட்டு விட்டதாகவும், மேலதிக வேலைகள் இடம்பெற்று வருவதாகவும், அவை நிறைவடைந்ததும் இம்மாத இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்பட்டு விடும் என்றும் மின்சாரசபை வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

அத்துடன், கடந்த மாதமும் புதிதாக 6 மின்மாற்றிகள் பொருத்தப்பட்டு மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(கி,ச)

# 20 ஆயிரம் இலங்கையருக்கு கொரியாவில் வேலைவாய்ப்பு

இந்த வருடத்தில் தென்கொரியாவில் இருபதாயிரம் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என அந்நாட்டு அரசாங்கம் தமக்கு உறுதியளித்திருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

தென்கொரியாவில் சிறு தொழில் நிறுவனங்களில் அதிகமான வெற்றிடங்கள் இருப்பதாகவும், இதற்கென இலங்கைத் தொழிலாளர்களை அனுப்பிவைக்கவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அங்குள்ள வேலைவாய்ப்பு நிலைமை குறித்து ஆராய, தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழுவொன்று தென்கொரியாவுக்குச் செல்லவுள்ளது.

இதேவேளை, சைப்பிரஸ் நாட்டிலும் இலங்கையர்களுக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுக்கொடுப்பது குறித்த பேச்சுக்களை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக நடத்தவுள்ளதாகவும் தெரியவருகிறது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மோட்டார்சைக்கிள் விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளுடன் சைக்கிளொன்று மோதி விபத்துக்குள்ளானதால் காயமடைந்த மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று கோண்டாவில் உப்புமடப் பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற இச்சம்பவத்தில்,

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சிறீகரன் ராஜன் (வயது 21), கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி பிரசன்னா (வயது 24) ஆகியோரும், சைக்கிளில் வந்த கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சுப்ரமணியம் இந்திரகுமார் (வயது 32) ஆகிய மூவருமே காயமடைந்த நிலையில் வைத்திய சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ச,கி)

### விளையாட்டுக் கழகக் கலந்துரையாடல்

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல், இன்று பி.ப. 3 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் அ.சிவசுவாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

### துவிச்சக்கரவண்டி திருட முயன்றவர் சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் சந்தைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டியைத் திருட முயற்சித்த ஒருவரை, இப்பகுதியில் கூடியிருந்த மக்கள் மடக்கிப் பிடித்து சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் மயிலங்காட்டு வாசி ஒருவரே துவிச்சக்கர வண்டியைத் திருட முயற்சித்ததாக அறிய முடிகிறது.

(கி,ச)

### பரதேச செயலகப் போட்டிகள் மார்ச் 15 இற்கு முன்

(நெடுந்தீவு)

இளைஞர் விவகார விளையாட்டு அமைச்சின், வருடாந்த விளையாட்டுப் போட்டிகளின் 2003 ஆம் ஆண்டுக்கான பிரதேச செயலக மட்டத்திலான போட்டிகளை, மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தி முடிக்குமாறு - சகல பிரதேச செயலகங்களுக்கும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரியினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(113)

### நெற்பயிரை நாசமாக்கும் கட்டாக்காலிகள்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் மேற்குப் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லையால் நெற்பயிரைப் பாதுகாக்க முடியாது விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

இப்பகுதியில் உள்ள வயற்காணிகளில் இரவு வேளைகளில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து கட்டாககாலி கால்நடைகள் வந்து நெற்பயிர்களை நாசம் செய்வதாகவும், திருவடிநிழல் காட்டுப்பகுதிக்கு கால்நடைகள் சென்று மேயமுடியாததனாலேயே இவ்வாறு பயிரை நாசமாக்குவதாகவும் சுழிபுரம் விவசாய சம்மேளன உபகுழு அறிவித்துள்ளது.

அறுவடைக்குத் தயாராகின்ற காலத்தில் நெற்பயிரை கட்டாக்காலிகள் நாசமாக்குவதால் விவசாயிகள் கவலை அடைந்து காணப்படுகின்றனர்.

(கி,ச)

### கிளிநொச்சியில் 9 கிராமங்களில் மீள்குடியமர முடியாதநிலை

(சரசாலை)

கிளிநொச்சி மாவட்டத்தில் 9 கிராம அலுவலர் பிரிவுகளில், மக்கள் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளனர்.

கடந்த காலத்தில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளின்போது இராணுவத்தினர் பெருமளவு கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளைப் புதைத்துள்ளமையால் மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

(34)

# காரைநகர் வைத்தியசாலையில் ஆளணி, மருந்துத் தட்டுப்பாடு!

## பணிகள் செயலிழக்கும் ஆபத்து!

காரைநகர் ஆதார வைத்தியசாலை ஆளணி மற்றும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக செயலிழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகின்றது.

இவ்வைத்தியசாலையில் ஒரே ஒரு பெண் வைத்தியரே கடமையில் உள்ளார். அவர் தினமும் சுமார் 200 வெளிநோயாளர்களைப் பார்வையிடுவதுடன், வைத்தியசாலை வார்ட்டுக்களில் தங்கியிருப்போரையும் பார்வையிட்டு வருகின்றார்.

இதேபோன்று தாதியும் ஒருவர் மட்டுமே கடமையில் உள்ளார். இவர்கள் விடுமுறையில் செல்லும் போது வைத்தியசாலை செயலிழந்து விடுகின்றது.

இது குறித்து, சுகாதாரத் திணைக்கள மற்றும் இந்து கலாசார அமைச்சர் ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (43)





தரம் 1 மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றதை முதற்படத்திலும், நெடுந்தீவு மகா வித்தியாலத்தில் நடைபெற்றதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# வட-கிழக்குப் பிரதேசத்தில் புதிதாகக் காணி அளவீடுகள்

வடக்கு-கிழக்கில் சகல பிரதேசங்களும் நில அளவைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

யுத்தத்தின் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்த நில அளவை அலுவலகங்கள் முற்றாகப் பாதிப்படைந்திருப்பதால், காணி விபரங்களை முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் கூறினார்.

இதனைக் கருத்திற் கொண்டு வடக்கு - கிழக்கில் காணிகளை அளவிடும் பணிகளை மேற்கொள்ளத் தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார்.

நில அளவைப் பணிக்கென நோர்வே நொராட் நிறுவனம் உதவிகளை வழங்க இருப்பதாக காணி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# இரவு நேரத்தில் அட்டகாசம் இருவருக்கு வாள் வெட்டு!

## தும்பளை தெற்கில் 5 வீடுகள் சேதம்

(வடமராட்சி கிழக்கு)

இரவுவேளை கிராமத்துக்குள் புகுந்த சுமார் 50 பேர் அடங்கிய கோஷ்டியினர், அங்குள்ளவர்களைக் கடுமையாகத் தாக்கியதுடன் 5 வீடுகளையும் சேதமாக்கி விட்டுத் தலைமறைவானார்கள்.

இச்சம்பவம் கடந்த 6ஆம் திகதி இரவு 9 மணியளவில், தும்பளை தெற்கில் இடம்பெற்றுள்ளது. கத்திகள், வாள்களுடன் சென்ற இக்கோஷ்டியினர் அக்கிராமத்தில் வசிக்கும் முத்தையா வில்வராசா (வயது 33), கனகரத்தினம் மனோகரன் (வயது 21) ஆகியோரை வாளால் வெட்டிக் காயப்படுத்தினர். இவர்கள் இருவரும் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர்.

இத்தாக்குதலின்போது இப்பகுதியிலுள்ள சி.நடேசன், செ.சந்திரகுமார், செ.நடராசா, வ.பாலச்சந்திரன் ஆகியோரது வீடுகள் சேதமாக்கப்பட்டன.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஸ்தலத்திற்குச் சென்ற பருத்தித்துறை பொலிஸார், தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிலரைக் கைது செய்துள்ளனர்.


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இரண்டாவது அகவையில்.

HAPPY BIRTHDAY



பெயர் : உ.சௌமியா
முகவரி: கே.கே.எஸ். வீதி, இணுவில் கிழக்கு.

இரண்டாவது அகவையில்.



பெயர் : சி.சாதுரியன்
முகவரி: வெல்லம்பிறறை, கரவெட்டி மத்தி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றார் ஒப்பம்


# சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் 40 இடங்களில் நீர்த்தாங்கிகள்

## குடிநீர் விநியோகத்துக்கு ஏற்பாடு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவும் பகுதிகள் இனங்காணப்பட்டு தினமும் குடிநீர் விநியோகிப்பதற்கு நகரசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களில் 40 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு, நீர்த்தாங்கிகள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் நீர் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இதற்காகத் தினமும், நீர்த்தாங்கிகளுக்கு நீரை நிரப்புவதற்காக நீர் கொள்கலன்களும், உழவு இயந்திரமும் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1999 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கும் திட்டத்திற்குக் கொள்வனவு செய்யப்பட்ட பவுஸர் தென்மராட்சிப் பிரதேசத்தில் நடைபெற்ற இடம்பெயர்வின்போது காணாமற்போனதுடன் உழவு இயந்திரம் படையினரால் கொண்டுசெல்லப்பட்டு இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை.

இதனால் இதுவரை இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (34)

## சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு காணி கொள்வனவு

(அச்சுவேலி)

சந்நிதியான் ஆச்சிரமத்திற்கென மேலும் 10 பரப்புக்காணி கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது. இங்கு கட்டடங்களைக் கட்டி, யாத்திரிகர்களைத் தங்க வைப்பதற்கும், இலவச வைத்தியசாலையை நடாத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் - இங்கு ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரித்தல் மற்றும் வயோதிபர்களைப் பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளவும் சந்நிதியான் ஆச்சிரமம் தீர்மானித்திருக்கிறது. (76)

# கீரிமலையில் நீராடுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

உயர் பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் கீரிமலைக்கேணிக்குள் நீராட வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் கீரிமலைச் சிவன்கோயிலில் வழிபாடு நடைபெறும் சிறப்பு நாட்களில் மட்டும் கேணிக்குள் இறங்குவதற்குப் படையினர் அனுமதித்தனர். தற்போது எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி மக்கள் சென்றுவர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது கேணியில் நீராடுவோர் தொகை அதிகரித்துள்ளது. (41)

## புற்றளை ஆலயத்துக்கு இராசகோபுரம்

தென்புலோலி புற்றாளை சித்தி விநாயகர் ஆலயத்தில் 40 இலட்சம் ரூபா செலவில் இராசகோபுரம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கையை ஆலயத் திருப்பணிச்சபை மேற்கொண்டு வருகிறது.

மேற்படி ஆலயத்தில் 25 இலட்சம் ரூபாவில் கல்யாண மண்டபம் அமைக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் 50 லட்சம் ரூபா செலவில் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. (17)

# உபதபாலதிபர்களுக்கு பதிலாளர் நியமிக்கப்படாததால் நெருக்கடி

## விடுமுறைகள் எடுக்க முடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள உபதபால் நிலையங்களில், உபதபால் அதிபர்களுக்குப் பதிலாக, பதில் கடமைகள் செய்வதற்குப் பதிலாளர்கள் நியமிக்கப்படாமையால் - அவசர தேவைகளுக்கு லீவு பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டிலுள்ள பெரும்பாலான உபதபால் நிலையங்களில் உபதபாலதிபர்கள் நீண்டகாலமாக நிரந்தரமாக்கப்படாது இருப்பதுடன், அவர்களுக்காக பதில் கடமை செய்வதற்கு பதிலாளர்கள் நியமிக்கப்படவில்லை.

இதனால் உப தபாலதிபர்கள் தமது சொந்தத் தேவைகளுக்கு லீவு எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட பதிலாளர்கள் தபால் திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளதால், இவ் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

உப தபாலதிபர்கள் தமக்குப் பதிலாளரை நியமிக்குமாறு கோரியுள்ளபோதிலும், அந்த நியமனத்திற்கான அனுமதி இன்னமும் வழங்கப்படாமையால், இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச,கி)

# விவசாய மேற்பார்வை அதிகாரிகளாக 8 பட்டதாரிப் பயிலுநர்கள் நியமனம்

## கமநலசேவைத் திணைக்களம் வழங்கியது

யாழ்.மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநராக - கமநலசேவைத் திணைக்களத்தில் பதில் பெரும்பாக உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய எட்டுப்பேரும், விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் விவசாயத் திணைக்களத்தில் மேற்பார்வை உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுகின்றனர். விவசாயம், கால்நடைகள், கமநல சேவை தொடர்பான விவகாரங்களை இவர்கள் கண்காணிப்பர் எனத் தெரியவருகின்றது. (17)

## முடிவுத் திகதி நீடிப்பு

பாடசாலை மாணவர்களுக்கா கலைவட்டத்தால் நடாத்தப்படும் அரும்பொருட்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்பூட்டலுக்கான கட்டுரை, சுவரொட்டிப் போட்டிகளின் முடிவுத் திகதி எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என நுண்கலைத்துறை, கலைவட்டம் அறிவித்துள்ளது.

# காலச்சூழலையும் நாட்டையும் பிரதிபலிப்பதுதான் இலக்கியத்தின் பணி

**'கவிக்கோ' அப்துல் ரகுமான் தமிழகத்தின் பிரபல்ய கவிஞர். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர். நேயர் விருப்பம், மின்மினிகளால் ஓர் கடிதம், பித்தனின் பாடல் தொகுதி, மகரந்த சிறகு போன்ற கவிதைத் தொகுதிகள் வெளியிட்டவர். மதச் சார்பின்மையையும், சமூக விடுதலையையும் ஆன்மீக சிந்தனைகளையும் பாடுபொருளாக முன்வைப்பதில் அக்கறை உடையவர். அண்மையில் யாழ். வந்திருந்த அவருடன் உரையாடிய பொழுது -**

*கேள்வி:-* முதற்தடவையாக யாழ்.மண்ணுக்கு வரும்பொழுது உங்களுடைய மனதில் எந்தவகையான எண்ணம் காணப்பட்டது?

*பதில்:-* நான் நெடுங்காலமாகவே யாழ்ப்பாணம் வரவேண்டும் என விரும்பினேன். இலங்கைக்கு முதற்தடவையாக வந்தபொழுது, யாழ்ப்பாணம் வர எண்ணியபோது கைகூடவில்லை. அப்பொழுது எனக்கு விசா வழங்கிய அரசாங்கம், யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லக் கூடாது என்ற நிபந்தனையின் பேரிலேயே அனுமதி வழங்கியது. அதன் பின்னர், இலங்கைக்கு பலதடவை வந்தும் இங்கு சூழ்நிலை சாதகமாக இன்மையால் வரமுடியவில்லை.

**நேர்கண்டவர்கள் - சேந்தன், இராஜேஸ்வரன்**

இப்பொழுது சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்தநாள் நிகழ்வில் கலந்துகொள்ளவும், பெரிய புராண உரை நிகழ்த்த வேண்டும என கம்பவாரிதி கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும், யாழ்ப்பாணத்தைப் பார்க்க வேண்டும் என்ற பேரவா காரணமாகவும் எனக்கு இங்குவர முடிந்தது.

இங்கு போரினால் எவ்வளவு அழிவுகள் ஏற்பட்டு, எங்களுடைய பண்பாடு, பாரம்பரியம், நூலகம், சொத்துக்கள் சீரழிந்துள்ளமை எனக்கு மிகுந்த மனவேதனையைத் தருகின்றது.

*கேள்வி:-* உங்களுடைய ஆரம்ப காலக் கல்வி, வாழ்க்கை பற்றி-

*பதில்:-* நான் செந்தமிழ்ச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் பிறந்தவன். வைகையாற்றங் கரையில் வாழ்ந்தவன். அந்த நீரைக்குடித்து வளர்ந்தவன். இதனால் என்னவோ தாய்மொழி உருதுவாக இருந்தபோதும் தமிழ் மொழியில் மிகுந்த ஈடுபாடு கொணடேன். உயர்கல்வி பயிலும்போதே கவிதை எழுத ஆரம்பித்து விட்டேன்.

மதுரை தியாகராஜர் கல்லூரியிலேயே B.A, M.A பட்டங்களை ஆறு ஆண்டுகள் கற்றுப் பெற்றேன். இதனால், தமிழ் மொழிசார் ஆழ்ந்த புலமையை என்னால் பெறமுடிந்தது. இக் காலப்பகுதியில் பல பட்டங்களைப் பெற்றதோடு- கவியரங்கம், மற்றும் புதுக்கவிதை, வசன கவிதைகளில் ஈடுபடத் தொடங்கி விட்டேன்.

பின்னர் 1971 முதல் வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியின் பேராசியராக முப்பது ஆண்டுகள்



அப்துல் ரகுமான்

சேவையாற்றி, நான்கு வருடங்களுக்கு முன்னராகவே இலக்கியப் பணியின் நிமித்தம் விருப்பு ஓய்வு பெற்றேன்.

*கேள்வி:-* உங்களுடைய இலக்கிய வாழ்க்கையின் பதிவுகள்...?

*பதில்:-* கவியாத்திரை என்ற கவியரங்கத்தை புதியவடிவில் நடத்தியுள்ளேன். "ஹைக்கூ" என்ற கவிதை வடிவத்தை தமிழில் அறிமுகப்படுத்தி, இன்று ஆயிரக் கணக்கான கவிஞர்களை அதற்குள் அழைத்து வந்துள்ளேன்.. புதுக்கவிதை பற்றிய கட்டுரைகள் எழுதியுள்ளேன். நகல் என்ற புதிய வடிவத்தைப் பின்பற்றி "மின்மினிகளாக ஒரு கடிதம்'', மற்றும் "மகரந்த சிறகு'' என்ற புத்தகம் ஊடாக அறிமுகப்படுத்தினேன். ஐரோப்பிய நாட்டு புதுக்கவிதை இயக்கம் பற்றியும் நான் எழுதியுள்ளேன்.

இப்பொழுது உலகமகா காவியம் என்ற காவியத்தை எழுத வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டு பல்வேறு குறிப்புக்களை எடுத்து வருகின்றேன். நேரம் கிடைப்பது அரிது என்ற காரணத்தால் அதனை வெளியீடு செய்வதில் தாமதம் ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன்- 100 வாரங்கள் தொடர்ந்து கட்டுரைகள், கவிதைகள் எழுதி சாதனை செய்திருக்கின்றேன்.

"பாக்கியா"என்ற பத்திரிகையில் "ஆலாபனை" என்ற கவிதை வெளிவந்தது, சாகித்திய அக்கடமி என்ற பரிசைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

*கேள்வி:-* ஒரு கவிஞனாக வருவதற்கு எந்த வகையில் முயற்சி செய்ய வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

*பதில்:-* நல்ல கவிதையை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும். அடிக்கடி எழுதி முயற்சிக்க வேண்டும், சிந்திக்கவேண்டும், அழகாகச் சொல்ல வேண்டும், மக்களின் தேவையை, விருப்புக்களை உணர்ந்து கவிதைகளை இயற்ற வேண்டும். அத்துடன், இவனுடைய பார்வை ஏனைய மக்களின் பார்வைக்கும் இடையில் வித்தியாசப்பட வேண்டும். அதாவது, கூர்மைப்பட வேண்டும். அப்பொழுதுதான் ஆழமான கவிகளை ஆக்க முடியும்.

*கேள்வி:-* தமிழ்க் கவிதையியல் என்று பார்த்தால், தமிழகக் கவிதையியலுக்கும், ஈழத்துக் கவிதையியலுக்கும் இடையிலான நீங்கள் காணும் வேறுபாடு யாது?

*பதில்:-* நிறைய, அதாவது தமிழ்நாட்டில் இருக்கும் பிரச்சினைகள் வேறு, இலங்கையில் இருக்கும் பிரச்சினைகள் வேறு. அண்மைக்காலப் பிரச்சினைகள் காரணமாக ஈழத்துக் கவிதை மிகக் கூர்மை அடைந்திருக்கின்றன. வெப்பம் அடைந்திருக்கின்றன.

எங்களுக்கு அதுமாதிரிச் சூழல் இல்லை. அதனால், எமது கவிதை வேறு போக்கில் வளர்ந்து கொண்டிருக்கின்றது. நம்நாட்டுச் சூழலுக்கு ஏற்ப எமது கவிதைகள், மோசமான அரசியல் சூழலை விமர்சனம் பண்ணுகின்றோம், சமுதாய நிலைமைகளை விமர்சனம் பண்ணுகின்றோம். தனியான அகமான கவிதைகளின் போக்கு வளர்ந்து கொண்டு இருக்கின்றது. பழைய காலத்தினை எடுத்துக் கொண்டாலும்கூட நிறைய மாறுபாடு. அதாவது, சூழல் காரணமான மாறுபாடு. மொழியுங்கூட ஒரு வித்தியாசமான மொழி அமைப்பு. மரபுக் கவிதைக் காலத்திலும் கூட நாம் மஹாகவியிடம் ஒரு வித்தியாசத்தைப் பார்க்கின்றோம்.

அண்மைக்காலத்தை பொறுத்தவரை மிகக் கூர்மையான நல்ல கவிதைகள் ஈழத்தமிழர்களிடம் இருந்து வந்திருக்கின்றன. புலம்பெயர் கவிதைகள் என்று கவிதை மரபு என்று புதுவிதமான ஒரு கவிதை. அந்தக் கவிதைகளும் நன்றாக வருகின்றன.

(அடுத்த திங்கள் தொடரும்)

## யாருக்கு?

ஆண்டாண்டு தோறும்
அவதரிக்கும் தைமகளே!

நீ பிறக்கும் போதெல்லாம்
வழி பிறக்கும் என்கிறார்
யாருக்கு? என்பதுதான்
என் கேள்வி
உன்னால்
வழி பிறக்கும்போது, சிலர்
விழி பறிக்கப்படுகிறதே

நீ
படைக்கின்ற பாதையிலே
பண உருளைத் தேர்களுக்கே
பவனிகள்; திருவிழாக்கள்
மற்றவர்க்கோ
'இது வழி அல்ல' என
இடை மறிக்கும் பலகைகள்
மீறி நடந்தால்
பாதங்களை தின்னும்
பாதைகள்!

பாத யாத்திரைப்
பயணிகட்கு மட்டும்
நீகாட்டும் வழியெல்லாம்
நீண்டவழி; சிலர்க்குமட்டும்
குபேரபுரிக்குக்
குறுக்குவழி! சரிதானா?

ஆண்டுக்கோர் முறைவரும்
அஞ்சற் காரியே!
வியர்வை முகவரிக்கு
வந்த 'பணவிடை'யைப்
பொய்க்கை எழுத்துப்
போடுவோர்க் கல்லவா
கொடுத்துவிட்டுப் போகின்றாய்
கொடுமையிது ஒழிவதென்று?

**- அப்துல் ரகுமான்**

*(நேயர் விருப்பம் என்னும் தொகுதியிலிருந்து)*




## காசும் மனமும்

எப்போதும் கணக்கு
பார்த்துக் கொண்டிருக்கிறது மனம்
கூட்டி –
கழித்து –
பெருக்கி –
பிரித்து – என்று
அதனது ஆசைக்கு எற்றபடி
முப்பது வயதில் பார்த்த
கணக்குகள் கோடி வரையும்
செல்லும்
இன்னும் தொகையாய் இலட்சத்தைக்
கூட பார்த்ததில்லை.
தோகை மயிலைக் கண்டால்
வெறும் மயில்.
பச்சை மயிலைக் கண்டால்
ஆகா என்ன அழகு.
எவ்வளவு காலமாக கடினப்பட்டு
சில்லறையையும் தாளையும் –
கண்டு பிடித்திருக்கின்றார்கள்
இல்லாதவனை அவமானப்படுத்த.
திருவிழாவில் தொலைத்த
பத்துருபா எத்தனை தடவை
மனதில் வந்து போயிருக்கும்!
அடுத்த சம்பளத்தை
எதிர்பார்த்துத் தானே
ஆயுள் குறைந்து போகிறது.
தெருவும் வீடும் என்று
வாழ்க்கை ஆனதற்கு இதைவிட
பெரிய காரணம் வேறு
என்னதான் சொல்ல.
பணம் இல்லாமல் ஒரு
உலகை கண்டு பிடிக்கவே
முடியாதா என்ன?



கோகுலராகவன்

## A-9 னை நீளும் நினைவுகள்

**பகுதி பதினான்கு**

A-9 தெரு வவுனியாவுக் கப்பால்
இப்படி மூன்று இடங்களில் துண்டுகள்
ஆக .. அறுபட்டு அன்று துடித்தது.
தொடர்பறுந்ததால் தெற்குத் தொடர்புக்கு
ஏதுபாதையோ? ஏக்கம் வலுத்தது.
இரவு பகலென யுத்தம் வெடித்ததால்
மூக்கைச் சுற்றித் தொடுதலைப் போல் வேறு
மூலைமுடுக் கூடு பாதை பிறந்தது.

கொம்படி எனக் கொட்டிக் கிடந்திடும்
கோல வெளி, ஊரியான் உவர்ப்பற்றைகள்,
"தங்களூடாகப் பயணங்கள் போகலாம்"
என்றுரைக்கப் புதுவழி தோன்றிற்று.
எங்கள் வாழ்விலே பயண இடர்.. இந்த
இடைவெளிக்குள்ளே பல்கிப் பெருகிற்று.
சங்கம் வைத்து திரிந்த தமிழ்... சேறு
சகதியுள்ளும் விழுந்து எழுந்தது.



கோடை காலத்தில் வாடி வரண்டிடும்...
கொம்படி வெளி; 'போக்கு வரத்துக்குத்
தோது' என்று நாம் துள்ளிக் கடந்தனம்.
தூர ஆனை இறவின் 'தொலைத் தொடர்க்'
கோபுரம் தெரிந்தாலும்... எறிகணை
கூவும் போதும் பயணம் தொடந்தனம்.
ஆயினும்... விழி சிந்திடும் மாரியில்
அலைக் கழிவுகள் ஆயிரம்பட்டனம்.

**- ஜெயங்கொண்டான்**

# அவன் வருவான்

**சிறுகதை**

**ச.சாரங்கா**

சின்னப்பெட்டை கைகளைத் தூக்கி நெட்டி முறித்துக்கொண்டாள். தன்னையறியாமல் கொட்டாவி வந்தது. வெளியே இருள் இன்னமும் விலகவில்லை. அம்மாவைக் காணவில்லை. நாட்கள் செட்டை கட்டிப் பறப்பதாய்த் தோன்றுகின்றன அவளுக்கு. நேற்றுப் போல இருக்கிறது. சின்னண்ணாவின் பின்னால் மான்குட்டி போல ஓடித்திரிந்த காலம். காலையில் எழுந்ததும் இவளை அடித்து எழுப்புவான் அவன்.

"எழும்படி..... மாட்டைப் புல்லுக்கு விட்டிட்டு வருவம்..."

"போடா...."

இவள் சிணுங்குவாள். போர்வையை இறுகமூடிக்குறுகிப் படுப்பாள் அவன் போர்வையை பறித்துச் சுருட்டி வீசுவான். கண்ணோரம் நீர்துளிக்க இதமான தூக்கம் தொலைந்த துயரத்தோடு வேண்டா வெறுப்பாய் எழும்புவாள். எல்லாம் கொஞ்ச நேரந்தான். அண்ணனுடன் வெளியில் புறப்பட்ட பிறகு உற்சாகம் பொங்கும். போகும் வழியெல்லாம் கதை ஓயாது. ஊர்ச் சனசமூக நிலையத்தில் படித்த சஞ்சிகைகள், துணுக்குகள், நடிகர்களின் வாழ்க்கை இரகசியங்கள் என்று தினமும் பெருகும் புதினங்கள். இடையிடையே அவனது 'கைச் சரக்கும்' சேர்ந்த புளுகுமூட்டைதான் அது எனினும் சுவாரஸியந்தான். அண்ணா அவளைப் பொறுத்தவரை பெரிய அறிவுக் கடலாகவே இருந்தான். இவளுக்கும் எழுத்துக்கள் தெரியும். ஆனால் வேகமாக வாசிக்க வராது. எழுத்துக் கூட்டிப் படிக்கப் பொறுமையும் இல்லை. அவள் அது பற்றி மன வருத்தப்பட்டாள். அண்ணா அவசரமாய்ச் சொல்லுவான்.

"பொம்பிளைப் பிள்ளைக்கு எதுக்கடி படிப்பு? விட்டுத்தள்ளு..."

அவர்களின் சமூகத்தில் படிப்புப் பெரிய விஷயமில்லைத்தான். குழந்தைகள் கட்டுப்பாடின்றிப் பிறப்பார்கள். தன்னிச்சையாகக் காட்டுச் செடிகள்போல வளருவார்கள். வயிற்றுப்பாட்டுக்கு வழி வந்து விட்டால் குடித்தனம் தொடங்குவார்கள். சீதனக் கொள்கை இறுக்கமாய்ப் படராத சிற்றூர். சந்தோஷ வாழ்விற்குக் குறைவில்லை. ஆனாலும் சில வருடங்களாகச் சனங்கள் இது பற்றி விழிப்புணர்வுற்றதாய்த் தோன்றுகிறது.

"சின்னப்பெட்டை..... நிண்ட படி கனவு காணுறியேடி....."

மூத்தக்காளின் குரல் இவள் நினைவோட்டத்தைக் குறுக்கறுத்தது. செல்வலட்சுமி தான் இவளது டாப்புப் பெயர். ஆனாலும் எல்லோருக்கும் சின்னப்பெட்டை தான். இவளும் வயதுக்கு வந்து நான்கு வருடங்களாகிவிட்டது. சின்னண்ணா இருந்திருந்தால் இவளது கழுத்திலும் 'தாலிக் கொடி' ஏறியிருக்கும். வீட்டுக்கு ஒரு ஆண்பிள்ளைத் துணை கூடியிருக்கும். எல்லாம் பொய்யாகிப் போய்விட்டிருக்கிறது.

"நீ வரமாட்டியோ...."

"வந்திட்டன்... என்னக்கா..."

"இண்டைக்கு நீதான் அரிசியைப் போட்டு வடி... நிவாரணம் குடுக்கிறாங்களாம். எடுத்திட்டு வாறன்...."

"ம்...."

சின்னண்ணா இருந்திருந்தால் அவன் 'போட்டு' வடித்திருப்பான்.

"கொதிகஞ்சியைக் கையிலை ஊத்தவேண்டாம். போடி அங்காலை...." இவளை விரட்டுவான்.

"நாளைக்குப் புருஷன் வீட்டிலை போய் என்ன செய்யப்போறாள்

உன்ரை செல்லத் தங்கச்சி..."

"அந்த நேரத்திலை அவன் வடிச்சுக் குடுக்கட்டன். என்ன தங்கச்சி..." கண்களைச் சிமிட்டிச் சிரிப்பான். அவனது பாசத்திற்கு இணையாக எதையும் சொல்ல முடியாது. மூத்த அண்ணனை இவளுக்கு நினைப்பில்லை. இந்தியன் ஆமிக்காலத்தில் சூடுபட்டுச் செத்ததாக அம்மா சொல்லி அழுவதுண்டு. இவள் 'வயிற்றில் வந்த' பொழுதில் அப்பா மாரடைப்பில் செத்தாராம்.

"வந்த பொழுதிலேயே அப்பனை விழுங்கின குட்டிப் பிசாசு..."

பாட்டி இருக்கும் காலம் வரை இவளைத் திட்டிக் கொண்டிருந்தாள். இவளுக்குப் பாட்டியில் கோபம் இல்லை. அப்பாவில் தான் கோபம்.

"அப்பா அதுவரைக்கும் இருந்து அவள் பிறந்த பொழுதில் ஏன் செத்துப் போக வேணும்?"

சின்னண்ணா அவளது கோபம நியாயமானது என்றான். அவன் எப்போதும் அவள் பக்கந்தான்.

சின்னண்ணாதான் குடும்பத்தின் முதுகெலும்பாக இருந்தான். அக்காவைக் கூட ஊர் வழக்கப்படி சின்னவயதில் "செய்து" கொடுத்தார்கள்தான். ஆனால், திருமணத்துக்குப் பிறகுதான் தெரியவந்தது அவன் குடிகாரன் என்று. தினமும் குடித்துவிட்டு வந்து அடியும் உதையும்தான். ஊரறிய மனைவிக்கு அடிப்பதை ஒரு துணிகரச் செயலாகக் கருதியிருக்க வேண்டும் அவன்.

ஒரு நாள் நேரடியாகவே அக்கா வீட்டுக்குப் போய்விட்டான் சின்னண்ணா. "வெளியிலை வாடா...."

குரலில் சிங்கம் கர்ச்சித்தது. அக்காவின் புருஷன் குடிபோதையில் வெளியில் வந்தான். கடைவாயில் பீடித்துண்டின் செந்நிறத் தீக்கங்கு மின்னிற்று. கண்கள் அதைவிடச் சிவந்திருந்தன.

"ஆரடா.... அவன்...." நிற்க முடியாமல் தள்ளாடினான்.

"அக்காவை ஏன் கொடுமைப் படுத்துறாய்? கேட்டிட்டுப் போகத் தான் வந்தன்..."

"கேட்டிட்டுப் போக வேண்டாம். கூட்டிக்கொண்டு போடா அவளை..."

ஒரு பெட்டையைப் பெத்து அதையும் சாகக்குடுத்திட்டு நிக்கிறாள்..." அம்மன் கோபங் கொண்டு அக்காவின் ஒரு வயதுக் குழந்தையைப் பலிகொண்டதாய் ஊர் கதைத்தது. உண்மை அதுவல்ல. மருந்து தேவையில்லை என்று வீட்டில் வைத்திருந்தே தன் கண்மணியைப் புருஷன் கொன்றதாகத்தான் அக்கா நம்பினாள். அவனுக்கும் அது தெரியும்.

"டேய்...."

இருவரும் கட்டிப்புரண்டு சண்டையிட்டார்கள். அடித்து, உதைத்துக் கொண்டார்கள். உதடு கிழிந்து இரத்தம் கொட்டிற்று. ஓரமாய் விழுந்தவனில் ஏறிமிதித்து உள்ளே புகுந்தான் சின்னண்ணா. இவள் மழையிலடிபட்ட சிறுபறவைக் குஞ்சுபோல அருகில் நடுங்கிக் கொண்டு நின்றாள்.

"பட்டதுபோதும் வா அக்கா. நான் உழைச்சுக் கஞ்சி ஊத்துவன் உனக்கு"

கைபிடித்து அக்காவை அழைத்து வந்தான். அன்றிலிருந்து அக்காவும் வீட்டினுள் முடங்கிக் கொண்டாள். தேவையான வார்த்தைகளை மட்டும் பேசினாள். ஊரில் அதிகம் தலைகாட்டுவதில்லை. புறம் பேசல்களைப் பொறுத்துக் கொள்ளும் மனத் தைரியம் அவளுக்கு இல்லை.

குடும்பப்பாடு பொறுத்துப் போனது. ரெண்டு கறவை மாட்டோடு சீவியம் நடத்த முடியாதிருந்தது. நான்கு வயிறுகள் இதை மட்டும் நம்பியிருக்க முடியாது. உழைத்தே ஆக வேண்டும். பட்டினி நெட்டித் தள்ளிற்று. சின்னண்ணா குழாயடிக்கப் போனான். கற்பாறைகளைத் துளைத்து நீர்ப்படுக்கை தொட்டுக் குளிர்ந்த தண்ணீரை மேலுக்கு எடுப்பது சிறிய விஷயமில்லை. உடம்பின் ஒவ்வொரு அலகிலும் இருக்கின்ற பலமெல்லாம் சேர்த்துத் திரட்டி ஓங்கி ஓங்கிக் குழாய் அடிப்பார்கள். 'உம்' காரங்கள் முறுக்கேறிய உடல்களின் முழு முயற்சியைச் சொல்லாமலே சொல்லும். "போடு" "போடடா" சத்தங்களில் ஏழ்மையெனும் துயரகீதம் இழையும். பசிக்கும் வயிறுகள் இருக்கும் வரைக்கும் பாடுகள் பட்டுத்தானே ஆகவேணும். அவன் உடல் இறுகிற்று. தசைகள் வலிந்து திரட்சியுற்றன. இரத்தம் கன்றிய கரங்கள் மரக்கட்டை போல் தடித்தன. மனமும் கூடத்தான். குடும்பம் காப்பாற்றும் கொள்கைப் பிடிப்போடு வலிந்து இறுகியது மனம்.

சின்னப்பெட்டை திரும்பிப் பார்த்துபோது அக்கா படியிறங்கிப் போயிருந்தாள். இனிக் கொதிக்கும் வெயிலில் நிவாரணமும் கொண்டு தள்ளாடி வருவாள். தோல் உலர்ந்து ஒடிசலாய் இருந்தாள். இளமையும் வற்றிப் போனதாகவே நடந்து கொண்டாள். புருஷக் கனவுகளின் கருமை நிறத்தை மட்டும் கண்டவள் அவள். அவை கலைந்தபிறகு வெளிப் பேதும் வரவில்லை. ஆக, ஒரு மங்கிய சித்திர மீதிக் கூழ்க்கலவையாய் எதற்கும் உதவற்றுப் போய்க் கிடக்கிறது அவளது வாழ்வு. நீதிகேட்க சின்னண்ணாவும் இல்லைத்தான்.

சலிப்போடு எழும்பி அடுக்களைக்குள் புகுந்தாள். அத்தியாவசியப் பொருட்கள் கூட இல்லாத வெறுமைக்குள் அந்தக் குச்சுக் குசினி தோய்ந்திருந்தது. சாம்பல் அள்ளிக் கொட்டினாள். பெரும்பாலும் சாம்பல் பூக்க ஆசையுடைய அடுப்புத்தான் அது. அடுப்பு மூட்டுவதற்குத் தீப்பெட்டி தேடிய போது உள்ளே மூன்றே மூன்று குச்சிகள் மட்டும் இருந்தன. கை விளக்கு எடுத்துக் கவனமாய்ப் பற்றவைத்தாள். ஒருநாளைக்கு ஒரு குச்சிக்கு மேல் பாவிப்பதில்லை. இனித் தணலை ஊதி ஊதிப் பற்ற வைத்துக்கொள்ள



வேண்டியது தான்.

காலைச்சாப்பாடு பெரும்பாலும் தேநீருடன்தான் போகிறது அவர்களுக்கு. மத்தியானச் சோற்றினை மதியத்துக்குக் கொஞ்சம் முன்னம் சாப்பிட்டு வயிற்றைப் 'பேய்க் காட்ட' முடியும். ஆனால் இரவுச் சாப்பாட்டுக்கும் வழியற்றுப் போகிறபோது தான் தாங்கமுடியாமல் இருக்கும். அம்மாவும் அக்காளும் எப்படித்தான் சத்தமில்லாமல் பசியைப் பொறுத்துக் கொள்கிறார்களோ?

"ஏனடி...நித்திரை நோக்கமில்லையே..."

"ம்... பசிக்குது..."

"பசிச்சாப் பச்சைத் தண்ணியை எடுத்துக் குடி..."

"வெறும் பச்சைத் தண்ணியை எப்பிடிக் குடிக்கிறது..."

"பிஞ்சுமிளகாய் ரெண்டைச் சப்பிக் குடிக்கிறது... போடி..."

அம்மாவுந்தான் என்ன செய்வாள்? உழைத்துக் கொடுத்த ஒரே மகனும் காணாமல் போன பிறகு, மூன்று வயிறுகளை நிரப்ப ரெண்டு கறவை மாடுகள் தானிருந்தன.

காணாமல் போனதென்ன? கைது செய்துதான் கொண்டு போனார்கள். பிறகு இல்லை யென்று கை விரித்தார்கள். ஒரு சுற்றிவளைப்பின் இருள் விலகாத பொழுதில் 'பச்சையாய்ச்' சுற்றினார்கள். உரமேறிய உடம்பு கண்ணுறுத்தி இருக்க வேண்டும்.

'தம்பி... றெயினிங்... எடுத்தது...?'

'இல்லை ஐயா...'

'பொய் சொல்லுறது...'

ஒருவன் அவசரப்பட்டுக் கன்னத்தில் அறைந்தான். ஒரு இயல்பான உயிருந்தலாய்க் கையுயர்த்தித் தடுத்தான். தவறாகிப் போயிற்று. குடிசை வாசலில் வைத்து புரட்டிப் புரட்டி அடித்தார்கள். தாய்க்கிழவியும் பெண்பிள்ளைகளும் கதறியழுதது கருத்தெடுக்கப் படவில்லை. திடகாத்திரமும் வலிமையும் மிக்க சின்னண்ணா தரையில் கிடந்தபடி கைகுவித்துத் தன்னை அடிக்கவேண்டாமென மன்றாடியது இன்றும் அவளைப் பொங்கிப் பொங்கி அழவைக்கும்.

"பாவம் எங்கை கிடந்து என்ன பாடு படுறானோ?..."

தன்னையறியாதே வாய் விட்டுச் சொல்லி விட்டாள். அன்று பிடிபட்ட எவருமே உயிருடன் இல்லை என ஊர் கதைத்தது. இவளையோ அல்லது இவளின் குடும்பத்தினரையோ முகங்காணும் போதெல்லாம் இரண்டு கேள்விகளை விசிற எவரும் மறப்பதில்லை.

"அண்ணனைப் பற்றி ஏதாவது தெரியுமே...?'

"ராமலிங்கம் இன்னும் அவளைக் கூப்பிடேல்லையே...?"

இவள் 'இல்லை' எனத் தலையாட்டுவாள், இரண்டின் பதிலும் இல்லைத்தான்.

"அண்டைக்குப் பிடிப்பட்டதிலை 'ஒண்டும்' மிச்சமில்லையாம். மெய்தானே...?"

'இல்லை. சின்னண்ணா இன்னும் சாகேல்லை...'

வெறிபிடித்த உக்கிரமாய் இவள் சொல்லுவாள். கனவில் கூட அதையே சொல்லிச் சொல்லி அரற்றுவாள்.

"சின்னண்ணா இன்னும் சாகேல்லை... சாகேல்லை...

எத்தனை இரவுகளில் இப்படிச் சொல்லி அழுதிருப்பாள் அவள்.

கேற்றல் கொதித்திருந்தது. தேயிலையும் சீனியும் கொஞ்சமிருந்ததில் ஆசுவாசப்பட்டாள்.

"வெறுந்தேத்தண்ணி கூடக் குடியாமல் போட்டுதுகள்..."

அம்மாக்காகவும் அக்காக்காகவும் அவள் மனம் இரங்கிற்று. அண்ணனின் விஷயம் என்றால் அம்மா இருட்டோடு எழும்பிப் போய்விடுவாள். இரண்டு வருடமாக ஏமாந்தாலும் இன்னும் இழந்துவிட விரும்பாத அந்த ஒரே ஒரு நம்பிக்கையில்தானே அவள் உயிர் எஞ்சியிருக்கிறது. அவன் வருவான். அவளது சின்னமகன் 'அம்மா' என்று கூப்பிட்டபடி படியேறி வருவான். தகரப் படலைச் சத்தம் கேட்டால் கண்கூசிப் பார்ப்பாள்.

"தம்பி வாறானோ... தள்ளுறதைக் கேக்க அவன் போல கிடக்குது..." ஆனால் தம்பி எந்த நாளிலும் வரவில்லை. நேற்றுப் பேப்பரில் செய்தி வந்திருந்ததாகச் செல்லையாண்ணை சொன்னார். மனித உரிமைகள் ஆணைக்குழு காணாமல் போனோர் பற்றிய விசாரணைகளைத் தொடங்கி இருப்பதாகவும் போய் விபரம் கொடுக்கச் சொல்லியும் சொன்னார்.

செய்தி கேட்டதிலிருந்தே இருப்புக் கொள்ளவில்லை அவளுக்கு மகன் பிடிபட்ட திகதி, வதிவிட அத்தாட்சி, பிறப்புச் சாட்சி, அவனது அடையாள அட்டை, இது வரை செய்யப்பட்ட பதிவுகள் எல்லாமும் வைத்திருக்கிற நைந்து போன பொலித்தீன் பையை எண்ணிக்கையில்லாத தடவைகளில் சரிபார்த்தாகி விட்டது. ஒவ்வொரு முறையும் தன்னுணர்வின்றி அவள் வாய் அரற்றிற்று.

"அடிச்சு முறிச்சிடுங்களப்பா... நான் வளர்த்த குஞ்சு..."

மகனின் படம் பார்க்கக் கண்ணீர் பொங்கிப் பொங்கி வழியும். அழுகைதான். பகலிரவுக் கோடு கருதாத துயரநினைவின் ஊர்வலம் வாழ்வாகிப்போன சமூகத்தின் பிரதிநிதி அவள். வேறென்ன செய்ய முடியும் அழுவது தவிர?

தேநீர் குடித்தபிறகு அந்த அடுப்பிலேயே அரிசி போட்டு வடித்தாள். அக்கா கறந்து வைத்த பால் கொண்டு போய் அயல் வாடிக்கைக்காரருக்குக் கொடுத்து விட்டு வந்தாள். வேலியோரம் செழித்த சிறகவரைக் குழம்பாயிற்று. அண்ணா இருந்திருந்தால் கிழமையில் ஒரு நாளாவது மீன் வாங்கி வருவான்.

"திரளிக் குஞ்சுதான் கிடைச்சுதெணை... குழம்பாய் வையன்..."

படலையில் வரும்போதே சொல்லிக் கொண்டு வருவான். இவளுக்கும் மீன் மிகப் பிடிக்கும். மீனுள்ள நாட்களில் அவள் ரெட்டைச்சாப்பாடு சாப்பிடுவதாய் அண்ணா கேலி பண்ணுவான். சில நாட்களில் நெத்தலி மீனும் இஞ்சியும் பூண்டும் போட்டுப் புட்டவிப்பாள் அம்மா. சுறாவும் துண்டு மீன்களும் கூடச் சிலபொழுதில் வந்து வாய்ப்பதுண்டு.

"மீன் வாசத்தோடை சோறு தின்னலாமெணை..."

சொல்லிச் சொல்லிச் சாப்பிடுவான்... சின்ன்ண்ணா. கண்களை மூடி அதில் ஒரு ஆனந்த மயக்கத்தைக் கண்டு கொண்டதாகப் பாவனை பண்ணுவான். உலகின் மிகச் சுவையான அமிர்தத்தைத் தான் உண்ணுவதான பாவனை அவனதாக இருக்கும். அவனைப் போல ஒரு ஆண்மகன் போதும். பெண்கள் பலரை ரட்சிக்க முடியும் அவனுக்கு. தாயாக, மனைவியாக, சகோதரிகளாக அண்ணா காணாமல் போனபிறகு வீட்டில் எப்போதாவது மீன்வாசம் மணத்துக் கொண்டிருந்தது. பிறகு அதுவும் நின்றுபோய்விட்டது. அண்ணாவின் நினைவுமட்டும் புத்தம் புதிதாய்த் தினமும் தொடர்கிறது.

பொழுது விழத் தொடங்கியிருந்தது. மதியம் கடந்த பிறகு அக்கா நிவாரணப் பொருட்களோடு சோர்ந்து வந்தாள். இருவருமாக அம்மாவுக்காகக் காத்திருந்தார்கள். இனியும் தாங்கமுடியாதென்று 'பானை பார்த்துச்' சாப்பிட்டார்கள்.

மாலை மங்கிய வேளையில் தளர்ந்துபோய் அம்மா வருவது தெரிந்தது. கையில் அதே நைந்த பொலித்தீன் பை. எப்போது இதை நிரந்தரமாகக் கீழே வைக்கமுடியும் அவளுக்கு?

"என்னவாமெணை... ஏதாவது நல்லசேதி கிடைச்சுதே...?

அக்காதான் கேட்டாள்.

"ரெண்டு மாதங் கழிச்சு முடிவு வருமாம்..."

"இப்பிடி எத்தினை தரமாய்... ஏமாந்து போனம். இதாவது சரி வந்திடவேணும்..."

அக்காவின் குரல் பலவீனமாய் ஒலித்தது. தட்டத்தில் சோறு போடும் போது தாயின் கரங்கள் நடுங்குவது கண்டாள்.

"என்னம்மா செய்யுது..."

அதைக் கவனியாதவளாய் தாய் வாயிற்பக்கம் பார்த்தாள்.

"தம்பி வாறானோ... படலைச் சத்தம் கேட்க அவனைப் போல கிடக்குது..."

சின்னப்பெட்டை வாசல் பார்த்தாள். அக்கா வாசல் பார்த்தாள். வாசல் இரக்கமின்றி வெறுமையாய்க் கிடந்தது. அந்த வெறுமை ஒரு நாள் ஒளியில் நிறையும். அந்த வெளிப்பான பொழுதில் அவன் வருவான். ★

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

கடுஞ்சொல்லன் கண்இவன் ஆயின் - நெடுஞ்செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும்.

- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## பொறுப்பு மிக்கவரின் பொறுப்பற்ற செயல்!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - மிகக் கடுமையான வார்த்தைகளுடன் - நோர்வே பிரதமருக்கு எழுதிய கண்டனக் கடிதத்திற்கு, மிக நாசூக்கான, ராஜதந்திரம் நிரம்பியவகையில் அவரிடமிருந்து பதில் கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகள், சட்டரீதியான அனுகுமுறைகளினூடாக பெற்றுக்கொண்ட வானொலி உபகரணங்கள் விடயத்தில் - அரசாங்கத்தின் நேரடி விளக்கத்தைக் கோரியிருந்தநிலையில் - வெளியுறவுக் கொள்கைகளின் அடிப்படையிலான ராஜீகமுறைமையை மீறியவாறு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மிக அவசரப்பட்ட நிலையில் - நோர்வேப் பிரதமர் பொண்டவிக்குக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அதுவும் - விடுதலைப் புலிகள் வானொலி உபகரணங்களைப் பெற்றதும், அது வந்த வழிமுறைகளும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதே எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட விளக்கம் கிடைத்த பின்னரும் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நோர்வேயின் பிரதமருக்கு அனுப்பிய கண்டனக்கடிதம் - ராஜதந்திர வட்டாரங்களில் புருவங்களை வியப்பால் மேலெழ வைத்தது.

உண்மையில் - வானொலி உபகரணக் கொள்வனவு விவகாரத்திற்காக, அதுவும் இந்தப் பிரச்சினையில் நோர்வே எவ்விதத்திலும் சட்டங்களுக்கு முரணாகப் பங்கேற்கவில்லை எனத் தெரிந்த நிலையிலும் - விவகாரத்தை 'மற்றொரு நாட்டுப் பிரதமருக்குப் பகிரங்கக் கண்டனக் கடிதம்' எழுதுமளவுக்குப் பூதாகாரப்படுத்த வேண்டியதன் தேவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஏன் எழுந்தது என நோக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

நோர்வேயின் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன், முன்னேற்றம் கண்டுவரும் அமைதிப் பேச்சுவார்த்தைகளும் - உருவாகிவரும் சமாதானச் சூழலும், தனக்கு எவ்விதத்திலும் ஆதாயமாகிவிடவில்லை என்ற குறுகிய நோக்கில் இயங்கிவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் - உள்மன வெளிப்பாடாகவே இந்தக் கடித விவகாரம் அமைந்திருக்கிறது.

அதேவேளை - நோர்வேயின் மத்தியஸ்தத்தை, சந்தேகக் கண்ணோடு பார்த்துவரும் பிராந்திய வல்லரசின் செல்வாக்கும் இவ்விடயத்தில் இல்லாமலில்லை.

கொழும்பு வந்த இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் கன்வால் சிபால் - ஜனாதிபதியைச் சந்தித்து, விடுதலைப் புலிகளின் வானொலி உபகரணக் கொள்வனவு - இந்தியாவின் நலன்களுக்குப் பாதகமாகிவிடும் என்ற எச்சரிக்கையையும் தெரிவித்துச் சென்றதிலிருந்து - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் எதிர்ப்புணர்வு இவ்விடயத்தில் அமோகமாகவே இருந்தது.

அதேவேளை - சிங்களப் பௌத்த பேரினவாதச் சக்திகளும் - இந்த விடயத்தை 'பெரும் அரசியல் சதியென' விபரித்து கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் நடாத்தியிருந்தன.

எதிர்ப்பின் உச்சமாக - நோர்வே நாட்டின் தூதரகத்திற்கு முன்பாக வைத்தே, அந்நாட்டின் தேசியக் கொடி எரியூட்டப்படவும் செய்யப்பட்டது.

இந்தவகையில் - தூண்டிவிடப்பட்ட சிங்கள பௌத்த பேரினவாதமும், பிராந்திய வல்லரசின் செல்வாக்கும், ஜனாதிபதியின் தனிப்பட்ட அரசியல் ஆதாயத்தோடு கூட்டணி சேர்ந்துகொள்ள, வரைமுறையற்ற நடவடிக்கையை மேற்கொண்டார் ஜனாதிபதி சந்திரிகா.

அவரது இந்தச் செயற்பாடு, ராஜீக எல்லைகளை மீறுவதைக் கண்டே - வெளியுறவு அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவும் - இனிவரும் காலத்தில் நோர்வேப் பிரதமருடன் ஜனாதிபதி தொடர்புகொள்ளுவதாயின், வெளியுறவு அமைச்சகத்தின் ஆலோசனையைப் பெற வேண்டுமென அறிவித்தார்.

ஆனால் - அவரது கோரிக்கை உடனடியாகவே, ஜனாதிபதியால் நிராகரிப்புக்குட்படுத்தப்பட்டது.

இவ்வாறு - ஒரு ஜனாதிபதிக்குரிய பொறுப்புணர்வு இல்லாது, எதிரி நாடொன்றுக்கு வரையும் கடிதம் போல ஜனாதிபதி சந்திரிகா எழுதிய கடிதத்துக்கு - தகுந்த பதிலொன்றே நோர்வேப் பிரதமரிடமிருந்து கிடைத்துள்ளது.

எத்தகைய குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டாலும், இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பணிகளில் அர்ப்பணிப்புடன் நோர்வே ஈடுபடுமென அவர் தெரிவித்து, வரைமுறையற்ற குற்றச்சாட்டுக்களுக்கு, நெறிமுறைகள் நிரம்பிய பதிலொன்றைத் தந்துள்ளார்.

இப்படிப்பினையைக் கொண்டு - இனிமேலாவது உள்ளூரில் மட்டுமல்ல, சர்வதேச அளவுகளிலும், நாட்டினதும், தனது பதவிக்கானதுமான கௌரவத்தைச் சிதைப்பதாக நடந்து கொள்வதை ஜனாதிபதி சந்திரிகா தவிர்க்க வேண்டும். ஆனால் - அவர் செய்வாரா என்பது தான் அவரது நடவடிக்கைகளைப் போலவே முரண்பாடான விடயமாயிருக்கிறது.

# வீடு வீடாக சுகாதார ஆலோசனை சுகாதாரப் பரிசோதகர்கள் ஏற்பாடு!

## பாடசாலைகளிலும் மாணவருக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதாரப் பணிமனையின் பொது சுகாதாரப் பரிசோதகர்கள், வீடு வீடாகச் சென்று சுகாதார ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

யாழ்.குடாநாட்டில் அண்மைக்காலமாகப் பரவிவரும் காய்ச்சலிலிருந்து, மக்கள் எவ்வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் தம்மைப் பாதுகாக்கலாம் எனத் தினமும் 20 வீடுகளிற்கு சென்று சுகாதாரப் பரிசோதகர்கள் விளக்கமளித்து வருகின்றனர்.

சுகாதாரப் பகுதியினரின் இந்நடவடிக்கையின் மூலம் மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்றும் தற்போது காய்ச்சலைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக்கூடியநிலை தோன்றியுள்ளதாகவும், இனிவரும் காலத்தில் இந்நோய் பரவுவது அதிகரிக்காமல் இருக்க ஆவன செய்து வருவதாகவும் யாழ். மாநகர சுகாதாரப் பணிமனைச் செயலாளர் இ.இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சுகாதாரப் பணிமனையினால் தெரிவுசெய்யப்பட்ட சில பாடசாலைகளின் காலை வணக்க நிகழ்வில், பொதுச சுகாதாரப் பரிசோதகரால் - யாவரும் கைக்கொள்ளவேண்டிய சுகாதார முறைகள் பற்றிய விளக்கம் அளிக்கப்படுகின்றது.

இதன் மூலம் மாணவர்கள் பெரிதும் நன்மை அடைவதுடன் அவர்களது உறவுகளும் நோய்வராமல் பாதுகாக்கப்படுகின்றனர். இத்திட்டம் ஒவ்வொரு பாடசாலையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என மேலும் கூறினார். (ரா)

# சமஷ்டி குறித்து ஆராயும் சுற்றுலா அழைப்பை நிராகரித்த ஜே.வி.பி.

(கொழும்பு)

நான்கு நாடுகளின் சமஷ்டிமுறை குறித்து ஆராயச் செல்லவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர் குழுவில் ஜே.வி.பி. தரப்பிலிருந்து மட்டும் எவரும் கலந்துகொள்ளவில்லை.

ஜே.வி.பியினருக்கும் இந்தக்குழுவில் இணைந்து கொள்வதற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், தாம் சமஷ்டி முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும், இத்தகையதொரு குழுவில் தாம் இடம்பெற விரும்பவில்லை என்றும் கூறி ஜே.வி.பி. இந்த அழைப்பினை நிராகரித்துள்ளது.

இதேவேளை - ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம, தாம் ஒஸ்ரியாவின் சமஷ்டி குறித்தே விரிவாக ஆராய விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஒஸ்ரியாவில்தான் பல மொழிகள், பேதம், பல இனங்கள் இருக்கின்றன. எனவே, அங்குள்ள சமஷ்டி முறை குறித்தே ஆராய விரும்புகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

# தாய்லாந்துப் பேச்சுவார்த்தை மூலம் புலிகளின் சர்வதேச ஆதரவு அதிகரிப்பு!

## ஜே.வி.பி. கூறுகின்றது

தாய்லாந்தில் இம்முறை நடந்த பேச்சுவார்த்தைமூலம் விடுதலைப் புலிகள் சர்வதேசரீதியில் தமக்குக் கிடைத்து வரும் ஆதரவை மேலும் அதிகரித்துக் கொண்டுள்ளனர் என ஜே.வி.பி. கூறியுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைமூலம், வடக்கு - கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை இல்லாதொழிக்கும் நோக்கத்தையும் விடுதலைப் புலிகள் நிறைவேற்றிக் கொண்டார்கள் என்றும் ஜே.வி.பி. விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை - இந்தப் பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளே முழு அளவில் ஆதிக்கம் செலுத்தியதாகவும், அதனைப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாடு உறுதிப்படுத்தியதாகவும் ஜே.வி.பி. கூறியுள்ளது.

செய்தியாளர்கள் மாநாட்டில் அரசாங்கத் தரப்பினரைவிட புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது எனவும் ஜே.வி.பி. தெரிவித்தது.

# இந்திய, இலங்கை நாடுகளுக்கு அகாஷி விஜயம் ஆரம்பம்

இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவராக ஜப்பானிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டிருக்கும் யசுகி அகாஷி இந்திய, இலங்கை நாடுகளுக்கான விஜயத்தை நேற்று ஆரம்பித்திருப்பதாக ஜப்பானிய அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாய்லாந்தில் அரச - புலிகள் சமாதானப் பேச்சுக்களில் பார்வையாளராகக் கலந்துகொண்ட யசுகி அகாஷி அங்கிருந்து நேற்று இந்தியா புறப்பட்டார்.

இவர் இந்தியாவுக்கு விஜயம் செய்து அங்குள்ள அரச அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார். பின்னர் இலங்கைக்கு வந்து பல்வேறு தரப்பினருடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இவர் வன்னிக்கும் விஜயம் செய்யலாம் எனக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கதிர்காமர் பயணித்த விமானம் பனிமூட்டத்தால் திரும்பியது

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பயணஞ்செய்த விமானம் பனிமூட்டத்தால் புதுடெல்கியில் தரையிறங்க முடியாமல் அகமதாபாத்தில் தரையிறக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,

புதுடெல்கியில் லால் பகதூர் சாஸ்திரி நினைவுப் பேருரையாற்றுவதற்கு கதிர்காமர் அழைக்கப்பட்டிருந்தார். "தென்னாசியாவின் ஏழு சகோதரிகளும் எங்கே போகிறார்கள்" என்ற தலைப்பிலேயே இவரது உரை இடம்பெறவிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொள்ள புதுடெல்கிக்கு லக்ஷ்மன் கதிர்காமர் பயணஞ்செய்த விமானம் கடுமையான பனிமூட்டத்தினால் தரையிறங்க முடியாத நிலையேற்பட்டது.

இதனால், விமானத்தை அகமதாபாத் விமான நிலையத்தில் தரையிறக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர் - அகமதாபாத் விமான நிலையத்தில் இறங்கிய லக்ஷ்மன் கதிர்காமர், நினைவுப் பேருரை நிகழ்த்துவதற்குச் சற்று முன்பாகவே புதுடெல்கி சென்றடைந்தார்.

## ஏ-9 வீதியால் கைதிகளைக் கொண்டுசெல்ல

# விடுதலைப் புலிகளிடம் பாதுகாப்பு கோரும் சிறை அதிகாரிகள்!

ஏ-9 வீதியால் கைதிகளைக் கொண்டுசெல்வதற்கு விடுதலைப் புலிகள் பாதுகாப்புத் தரவேண்டும் என்று, யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.சிவசுந்தரம் கேட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் ஏ-9 வீதியால் அனுராதபுரம் சிறைச்சாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்ட கைதி ஒருவர் மாங்குளத்துக்கு அப்பால் கடத்திச் செல்லப்பட்டார். இதையடுத்தே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

முகமாலையிலிருந்து மாங்குளம் வரையே புலிகளின் பாதுகாப்பை சிறைச்சாலை அதிகாரிகள் கேட்டிருந்தனர். மாங்குளத்தில் புலிகளின் பாதுகாப்பு முடிந்ததும் தொடர்ந்து பயணத்தை மேற்கொண்ட சிறையதிகாரிகளை வழிமறித்த நால்வர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியைக் கடத்திச் சென்றனர்.

இச்சம்பவம் மாங்குளத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் இடம்பெற்றிருந்தது.

இதையடுத்தே, ஓமந்தைக்கும், முகமாலைக்கும் இடையில் ஏ-9 வீதியால் கைதிகளைக் கொண்டு செல்வதற்கு புலிகளிடம் பாதுகாப்புக் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 30 தடவைகள் இவ்வீதியால் சிறைக்கைதிகளைத் தாம் கூட்டிச் சென்றதாகவும், இது போன்ற சம்பவம் இடம்பெற்றது இதுவே முதல் தடவை எனவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இராஜதந்திர மொழிநடையில் நோர்வே பிரதமரின் கடிதம்

(கொழும்பு)

நோர்வே பிரதமர் பொண்டவிக் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைத்த கடிதம் முழுமையான இராஜதந்திர மொழிநடையில் இடம்பெற்றிருந்தது.

ஒரு பக்கத்தில் மட்டுமே இருந்த இக்கடிதத்தில், உங்களின் கேள்விக்கு இலங்கை அரசாங்கமே விளக்கம் கொடுத்துள்ள நிலையில் எமது அரசின் விளக்கம் தேவையற்றதெனவும் கூறப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

# முன்பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளுக்கு இயல்பான சூழலும், பரிவான கவனிப்பும் தேவை!

**வட- கிழக்கு மாகாணக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் முன்பள்ளிப் பிரிவின் திட்டமிடல் அலுவலர் இராசரட்ணம் சிவகுமார், வட- கிழக்கு மாகாணங்களிலுள்ள முன்பள்ளிகளின் தொழிற்பாடு பற்றி, அவரது அனுபவங்களினூடாகப் பகிர்ந்துகொள்கின்றார்.**

*கேள்வி:-* மாகாணக் கல்விய மைச்சின் முன்பள்ளிப் பிரிவின் பணிகள் என்ன?

*பதில்:-* எமது அமைச்சினைப் பொறுத்த வரையில் முன்பள்ளிகளைப பதிவு செய்தல், பொருத்தமான கலைத்திட்டத்தை உருவாக்குதல், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சியை வழங்குதல் மற்றும் முன்பள்ளிகளை மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்குதல் என்பன எமது அமைச்சின் முன்பள்ளிப் பிரிவின் குறிக்கோள்களாகும்.

*கேள்வி:-* முன்பள்ளிகளை விருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் பற்றிச் சொல்வீர்களா?

*பதில்:-* ஆரம்பக் கல்வியின் அத்திவாரம் எனக் கருதப்படும் முன்பள்ளிகள் வெவ்வேறு முறைகளில் கலைத்திட்டத்தை வழங்குகின்றன. இதனாலேயே ஒரே கலைத்திட்டத்தைக் கொண்டிருக்கக்கூடியதாக முன்பள்ளிக் கல்விமுறை விருத்தி செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

*கேள்வி:-* வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி சார்பான உங்கள் துறைசார் முயற்சிகள், வெளியீடுகள் பற்றிக் குறிப்பிடமுடியுமா?

*பதில்:-* எமது அமைச்சின் மேற்பார்வையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்குச் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூராட்சித் திணைக்களம், பொதுநல அமைப்புக்கள் உதவிவருகின்றன. எமது அமைச்சின் உயர் அதிகாரிகள், வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் முன்பள்ளிகளுக்குச் சென்று மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் வசதி குறைந்த, கஷ்டப் பிரதேச முன்பள்ளிகளுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

எமது அமைச்சினால் மாதாந்தம் "புன்சிரிப்பு" என்ற செய்திமடல் வெளியிடப்பட்டுவருவதுடன், வலயங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றது.




எமது அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவினரால் முன்பள்ளி ஆசிரியர் பயிலுநர் கைநூல் யுனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் அண்மையில் வெளியிடப்பட்டது. இப்புத்தகம் முன்பள்ளிகளை நடாத்தும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. மற்றும் "விளையாட்டு அல்லாத விளையாட்டு" சிறுவர் மகளிர் விவகார அமைச்சினால் தயாரித்து வெளியிடப்பட்டுள்ளது. இது முன்பள்ளிகளுக்கு ஒரு புத்தகம் வீதம் வழங்கப்படுகிறது. அதுவும் எமது அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது.

*கேள்வி:-* அரசாங்கம் முன்பள்ளி சார்பாக எதிர்காலத்தில் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது?

*பதில்:-* முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா போன்ற கற்கை நெறியை நடாத்த அரசாங்கம் முன்வந்துள்ளது.

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கிராமப்புற முன்பள்ளிகளுக்கு உபகரணங்கள் மற்றும் தளபாட வசதிகள் போன்றவற்றை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*கேள்வி:-* முன்பள்ளி அமைப்புக்களை அரசாங்கம் பொறுப்பேற்று அரசாங்கமயப்படுத்தும் சாத்தியக் கூறுகள் உள்ளதா?

*பதில்:-* இல்லை, அவ்வாறு செய்வதற்கு அரசிடம் தற்பொழுது நிதி வசதிகள் இல்லாதது இதற்குத் தடையாக உள்ளது.

*கேள்வி:-* முன்பள்ளிக்கும் ஆரம்பக் கல்விக்கும் இடையிலான தொடர்பு பற்றிக் கூறுக?

*பதில்:-* 3 வயது தொடக்கம் 5 வயது வரை பிள்ளைகள் கூடும் இடமே முன்பள்ளியாகும். இப்பிள்ளைகள் உடல், உளவிருத்தியைப் பெறுவதற்காக முன்பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். முன்பள்ளிப் பிள்ளைகளிடம் விளையாட்டுக்களும் அவதானிப்பும்தான் கற்பிக்கப்படுகின்றது. இதன் மூலம் பெறும் அனுபவம், ஆரம்பக் கல்விப் பாடசாலைக்குச் செல்வதற்கு உற்சாகமளிகின்றது. 6 வயது அடையும் பிள்ளைகளே ஆரம்பப் பாடசாலைக்குச் செல்லமுடியும். ஆரம்பக் கல்வியில் தரம் 1உம் 2உம் இதுபோலவே நடைபெறுகின்றது. அதாவது, விளையாட்டுக்கள் கூடுதலாகவும் செயற்பாடும் எழுத்தும் குறைவாகவும் இருக்கும். தரம் 5 இற்குச் செல்ல விளையாட்டுக்கள் குறைவடைய, எழுத்துச் சார்ந்த கல்வி கூடுதலாக முன்னெடுக்கப்படுகின்றது.

*கேள்வி:-* முன்பள்ளி ஆசிரியர்கள் கையாளக்கூடிய கற்றல் - கற்பித்தல் முறைகளை எடுத்துக் கூற முடியுமா?

*பதில்:-* அநேகமாக, மொண்டிசோரி அம்மையார் பயன்படுத்திய முறையே பயன்படுத்தப்படுகிறது. இதனை மொண்டிசோரி கற்பித்தல் முறை எனச் சொல்லப்படும். அதாவது, பிள்ளைகள் இயல்பான சூழலில் தாமாக முன்வந்து சுதந்திரமாக ஓடியாடி, விளையாடித் தனது கற்றலில் ஈடுபடக்கூடிய பாடசாலைச் சூழலையும் கற்பித்தல் கருவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவ்வாறு கற்றலில் ஈடுபடும் பிள்ளையை



இராசரட்ணம் சிவகுமார்

ஆசிரியர் பரிவுடன் கவனித்து அவர்களை நெறிப்படுத்தி வழிகாட்டுபவராக இருத்தல் வேண்டும். இதுவே மொண்டிசோரி கற்பித்தல் முறையாகும்.

*கேள்வி:-* முன்பள்ளிச் சிறார்களிடம் விருத்தி செய்யப்படவேண்டிய அறிவு, திறன், மனப்பாங்குகள் எவையெனக் குறிப்பிடமுடியுமா?

*பதில்:-* முன்பள்ளி ஆசிரியர் தம்மிடம் வரும் பிள்ளைகளுக்கு வீட்டுச் சூழலிலே பிள்ளை இருப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தி, ஆசிரியர் தாய்போல இருந்து நற்பண்புகளைப் பிள்ளைகள் பெறக்கூடியதாக உடல், உள விருத்திக்கேற்ற கதைகள் ஊடாக பிள்ளைகளின் அறிவு, மனப்பாங்கு, நடத்தைக் கோலங்களை விருத்தி செய்ய உதவுதல் வேண்டும்.

நேர்காணல்:- ப.இராஜேஸ்வரன்

# சர்வதேச புலனாய்வு அரசியல்



தனது உயர் தலைமைப்பீடத்துடன் சதாம்.

லிப்ரோ கிறப்ரர் என்றால் என்னவென்று கேட்டால் உங்களில் பலருக்கு இன்னமும் தெரியாது. காரணம் லிப்ரோ கிறப்ரருக்கும் அன்றாட வாழ்க்கைக்கும், உங்களுக்கும் நேரடித் தொடர்பு இல்லை. எனவே, லிப்ரோ கிறப்ரர் என்றால் என்னவென்று கூறிவிடுகிறேன்.

அது ஒரு மருத்துவ உபகரணம். இந்த உபகரணத்தை நவீன மருத்துவ உலகில் பயன்படுத்துவது கிட்னியில் ஏற்படும் கற்களைக் கரைப்பதற்கு. மனிதனின் கிட்னியில் சில கழிவுகள் படிவுகளாகப் படிந்துபோய்ப் பின்பு காலப் போக்கில் அவை இறுகிக் கடினமான பொருட்களாக மாறி விடுகின்றன.

இவற்றைத்தான் கல்லடைசல் என்கிறார்கள். இவற்றைக் காலம் காலமாக ஒரு அறுவைச் சிகிச்சையின் மூலம் மருத்துவர்கள் அகற்றி வந்தார்கள். இப்போது அறுவைச் சிகிசசைகள், சத்திரசிகிச்சை செய்யாமலே இக் கருவிமூலம் அகற்றி விட முடியும். அதற்குப் பிரயோகிக்கப்படும் மருத்துவ உபகரணந்தான் நான் ஆரம்பத்தில் கூறிய லிப்ரோ கிறப்ரர்.

இநதப் பெயர் வந்ததற்கு இரண்டு மொழிகள் காரணம். கிறீஸ் மொழியில் அதன் அர்த்தம் கல்லுடைத்தல். இது செய்வதெல்லாம் ஒரு வகையான **Shock Wave** களை உருவாக்கி, அதை மனிதனின் கிட்னியில் செலுத்துவன் மூலம் கல்லடைசல்களைக் கத்தியின்றி ரத்தமின்றி கரைந்துபோகச்செய்வது.

**கனடாவிலிருந்து ரிஷி**

இதை உருவாக்குவதற்கு ஒரு வகையான இலத்திரனியல் கருவியொன்று உபயோகிக்கப்படுகிறது. அந்த இலத்திரனியல் ஆழியை அழுத்தும்போது அது சக்தி வாய்ந்த மின்சார அதிர்வு, அலைவீச்சு ஒன்றை ஏற்படுத்த அதன் மூலம் **Shock Wave** ஒன்று உருவாகி அது சிறுநீரகக் கற்களைக் கரைக்கின்றது.

இந்த மருத்துவ உபகரணங்கள் சென்ற வருடம் ஜேர்மன் நிறுவனம் ஒன்றிலிருந்து ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அதற்கான உத்தியோகபூர்வ அனுமதியை ஜேர்மனியும் ஐ.நா.வும் கொடுத்திருக்கின்றன. ஈராக் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்திருந்தாலும் மருத்துவ சாதனங்களுக்கு அந்தக் கதை பொருந்தாது.

இதில் ஒரு சிக்கலும் இல்லை. ஈராக் 6 லிப்ரோ கிறப்ரர் உபகரணங்களை இறக்குமதி செய்தபோது அதற்குத் தேவையான உதிரிப்பாகங்களையும் சேர்த்தே இறக்குமதி செய்தது. அதிலும் எந்தச் சிக்கலும் இல்லை. உதிரிப்பாகங்கள் என்ற வகையில் ஈராக் கொடுத்த பட்டியலில், நான் முன்னரே கூறிய ஒரு இலத்திரனியல் ஆழிகளும் இருந்தன.

அதிலும் ஒரு சிக்கலும் இல்லை. ஆனால் ஆறு லிப்ரோ கிறப்ரர் உபகரணங்களுக்கு ஈராக் உதிரிப்பாகங்களாகக் கோரிய இலத்திரனியல் ஆழிகளின் எண்ணிக்கை 120. இந்த எண்ணிக்கை கொஞ்சம் சந்தேகத்திற்குரியது. 6 உபகரணங்களுக்கு சுமார் 12 முதல் 18 இலத்திரனியல் ஆழிகளை மேலதிக உதிரிப்பாகங்களாக வாங்கினால் போதுமானது. இதுதான் சாதாரணமான மருத்துவ உலகில் நடைமுறையில் உள்ள விடயம்.

இருந்தபோதிலும் ஈராக் 120 இலத்திரனியல் ஆழிகளைக் கேட்க ஜேர்மன் நிறுவனமும் தேவையான அனுமதியெலலாம் பெற்று, கடந்த வருடமே ஈராக்கிற்கு அனுப்பிவைத்தது.

சர்வதேச அரசியல் புலனாய்வு என்று கூறிவிட்டு ஏதோ சிறுநீரகம், கல், கருவி என்று எல்லாம் கதை விடுகிறீர்கள் என்று நீங்கள் நினைத்தால் இப்போது கூறப்போவதையும் அறிந்து வைத்துக்கொள்ளுங்கள்.

லிப்ரோ கிறப்ரர் இல் இருக்கும் இலத்திரனியல் ஆழி இயக்கப்படும்போது அது சக்திவாய்ந்த மின்சார அதர்வு அலை போன்றவற்றை உருவாக்கும் என்று கூறினேன் ஞாபகம் இருக்கிறதா?

அதே இலத்திரனியல் ஆழியை வேறு செயற்பாடு ஒன்றிற்கும் வேறு உபகரணம் ஒன்றிற்கும் உபயோகிக்க முடியும். அது என்ன தெரியுமா?

உபயோகப்படும் அதே லிப்ரோ கிறப்ரர் உபகரணத்தின் இலத்திரனியல் ஆழியின் அதே தொழில்நுட்பம் மூலமாக ஒரு அணுகுண்டை வெடிக்க வைக்க முடியும்.

ஈராக் அணுகுண்டு தயாரிப்பில் முழு மூச்சாக ஈடுபட்டு வந்ததை ஈராக் ஒப்புக்கொள்ளவில்லையே தவிர நிஜம்தான் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. ஈராக் எந்த விதமான அணுகுண்டைத் தயாரிக்கிறது அல்லது தயாரித்து வைத்திருக்கிறது என்பதைக் கூட சீ.ஐ.ஏ தீர்மானித்து வைத்திருக்கிறது.

அதன்படி அது **Type** 3 வகையான அணுகுண்டு எனத் தெரிய வருகிறது. **Type** 3 வகையான அணுகுண்டை இயக்குவதற்குத் தேவையான மொத்த இலத்திரனியல் ஆழிகளின் எண்ணிக்கை 32. ஈராக் இப்போது ஜேர்மனில் இருந்து உதிரிப்பாகமாக இறக்குமதி செய்த 120 இலத்திரனியல் ஆழிகளில் இருந்து 100 அணுகுண்டுகளை இயங்கவைக்க முடியும்.

வளைகுடா யுத்தம் தொடங்கும் முன்னரே 1980களிலேயே ஈராக் பல வெளிநாட்டு நிறுவனங்களுடன் வியாபாரத் தொடர்புகளை வைத்திருந்தது. அந்த வகையில் ஜேர்மன் நிறுவனமான "சீமந்' உடன் ஈராக் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து, அதன்படி சில உபகரணங்களை ஈராக்கிற்கு இறக்குமதி செய்திருக்கிறது. அந்த உபகரணங்கள் யுரேனியத்தை சுத்திகரித்து அணுகுண்டு தயாரப்பதற்கான தரத்திற்குக்கொண்டு வருவதற்கு உபயோகிக்கப்படக்கூடிய உபகரணங்கள். அந்த செயலுக்குப் பின்னர் போடப்பட்ட ஒப்பந்தம் தான் அந்த 120 இலத்திரனியல் ஆழிகள் சம்பந்தப்பட்ட வியாபாரம்.

இப்படியான இலத்திரனியல் ஆழிகளின் அணுகுண்டு சாத்தியத்தைத் தெரிந்து கொண்டோ என்னவோ ஜேர்மன் நிறுவனமான 'சீமந்' தனது தயாரிப்பான இந்த ஆழிகளைத் தானே நேரடியாக ஈராக்கிற்கு விற்பனை செய்யாமல், வேறொரு கிளை நிறுவனமான தொம்சன்ஸ் சீ எஸ் மூலமாக விற்பனை செய்திருக்கிறது. தொம்சன்ஸ் சீ எஸ் நிறுவனம் பிரான்ஸ் ஐச் சேர்ந்த ஒரு **multy Electronic** நிறுவனம்.



ஈராக்கில் ஐ.நா. ஆயுதக் கண்காணிப்பாளர்கள்.

எப்படியோ இந்த ஏற்றுமதி ஜேர்மனி, பிரான்ஸ் அரசுகளின் அங்கீகாரத்துடன்தான் நடைபெற்றிருக்கிறது.

அதுவும் கடந்த வருடம் நடைபெற்று இருக்கிறது. அதுவும் ஐக்கிய நாடுகள் ஈராக் அணுகுண்டு செய்கிறது எனக் குற்றஞ்சாட்டிய பின்னர் நடைபெற்று இருக்கிறது.'

*(நாளை தொடரும்)*

# கோபி அனான் யாழ். வர தானே விருப்பம் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கோபி அனான் யாழ்ப்பாணம் வருவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போரினால் சீரழிந்துள்ள பிரதேசங்களில் புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்கட்டமைப்புப் பணிகளில் ஐ.நாவின் பல அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன.

இதனால், குடாநாட்டுக்குச் சென்று அங்குள்ள நிலமையை நேரில் அவதானிக்க விரும்புவதாக கோபி அனான் தெரிவித்துள்ளார் எனவும் ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கோபி அனான் தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்தால், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.

# நாகர் கோவில் ஆலயத்தை பார்வையிட படையினர் அனுமதி

## பூசைகள் நடத்த அனுமதி மறுப்பு

சரித்திரப் பிரசித்தி பெற்ற நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலயத்தைப் பார்வையிட 9 பேர் கொண்ட ஆலயப் பரிபாலன சபையினர்க்கு படைத்தரப்பினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

படையினரின் வாகனத்தில் நேற்று இவர்கள் இப்பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கிளாலிப் பகுதி படைகளின் கட்டளை அதிகாரி இவர்களை இப்பகுதிக்கு அழைத்துச் சென்றார்.

ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஆலய பரிபாலன சபையினர், ஆலயத்தில் நித்திய பூசைக்கு அனுமதி வழங்குமாறு படையினரிடம் கோரிக்கை விடுத்தபோதும் படைத்தரப்பினர் அதற்கு மறுத்து விட்டனர் எனத் தெரியவருகின்றது.

(9)

# அடுத்தமாதம் தொடக்கம் ஷொப்பிங் பைகளுக்குத் தடை

ஷொப்பிங் பைகளுக்கு அடுத்த மாதம் முதல் அரசாங்கம் தடை விதிக்கவுள்ளதாக சுற்றுச் சூழல் இயற்கை வள பாதுகாப்பு அமைச்சர் ருக்மன் சேனநாயக்க தெரிவித்தார்.

ஷொப்பிங் பைகளைத் தடை செய்வது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானம், இந்த மாதத்துக்குள் எடுக்கப்பட்டுவிடும் எனத் தெரிவித்த அமைச்சர் ருக்மன் சேனநாயக்க,

20 மைக்ரோனுக்குக் குறைந்த தடிப்புள்ள பொலித்தீன்களை அரசாங்கம் தடைசெய்யவுள்ளதாகவும், இவற்றுள் ஷொப்பிங் பைகள், லன்ஞ் சீற் என்பன உட்பட 20 வகையான பொலித்தீன்கள் அடங்குவதாகவும் தெரிவித்தார்.

இவற்றுக்கு மாற்றீடாக மீள் பயன்பாட்டுக்கு உட்படுத்தக்கூடிய மாற்றுப் பொருட்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதேவேளை, அலங்காரங்களுக்கு பொலித்தீன்களைப் பயன்படுத்துவதையும் அரசாங்கம் தடை விதிக்கவுள்ளது.

நாடுமுழுவதும் 168 பொலித்தீன் தொழிற்சாலைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்த புலிகளின் மருத்துவப்பிரிவு களத்தில்

(வடமராட்சி)

குடாநாட்டில் பரவிவரும் வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவு ஈடுபட்டு வருகின்றது.

கடந்த சில மாதங்களாகக் குடாநாட்டில் பரவிவரும் வைரஸ் காய்ச்சலினால் வைத்தியசாலைகளில் நோயாளர்கள் அதிகரித்துள்ளதுடன் உயிரிழப்புக்களும் ஏற்பட்டு வருகின்றன.

இதனையடுத்து, குடாநாட்டிலும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகளின் மருத்துவப்பிரிவு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொண்டுவருகின்றது.

வைரஸ் காய்ச்சலின் தாக்கங்கள் அதிகரித்துள்ள இடங்களை இனங்காணும் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் மருத்துவப்பிரிவினர், விழிப்புணர்வுக் கூட்டங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் விநியோகிப்பதுடன்,

காய்ச்சல் தொற்று அதிகரித்துள்ள பகுதிகளில் சிரமதான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதுடன் மருத்துவ முகாம்களையும் நடாத்தி வருகின்றனர்.

(ச,கி)

# மேஜர் சோதியா நினைவாக நெல்லியடியில் நிகழ்வு

(வடமராட்சி)

மேஜர் சோதியாவின் 13 ஆவது ஆண்டு நிறைவுநாள் அஞ்சலி நிகழ்வு நேற்று முன்தினம் கரவெட்டி, கீரிப்பல்லியில் உள்ள நினைவுதூபிக்கு முன்பாக நடைபெற்றது.

பாடசாலை மாணவர்கள், அப்பகுதி மக்கள் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டதையடுத்து அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்வில் வடமராட்சி மகளிர்பிரிவு அரசியற்பொறுப்பாளர் வர்ணா ஈகச்சுடரினை ஏற்றினார்.

வடமராட்சி கோட்ட அரசியல் பொறுப்பாளர் இ.தயா மலர்மாலையை சூட்டினார்.

இந்நிகழ்வில் போராளிகளும், பொதுமக்களும் மாணவர்களும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(ச,13)

# அவுஸ்ரேலிய சமஷ்டி முறையே இலங்கைக்குப் பொருத்தமாம்!

## அவுஸ். நாடாளுமன்ற உறுப்பினரான முதல் இலங்கையர் கூறுகிறார்

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவில் உள்ளது போன்ற சமஷ்டிமுறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்துவது பொருத்தமானதாக இருக்குமென அவுஸ்ரேலிய நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது இலங்கையரான யுத் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த யோசனை, பிரிந்துள்ள இலங்கையின் பகுதிகளை ஐக்கியப்படுத்தும் என்றும் -

கலாசாரம் மற்றும் தாம் வேறுபட்ட பொருளாதாரத் தேவைகள், மக்கள் தாம் வாழும் பிரதேசங்களில் தமது தலைவிதியைத் தாமே நிர்ணயிற்கும் நிலை என்பன இருக்க வேண்டும் என்பது அத்தியவசியமானது என்றும் குறிப்பிட்டார்.

விடுமுறையில் இலங்கை திரும்பிய இவர் தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிங்களவரான இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். மாநகரசபையின்

# நலன்புரிச் சங்கத்திலிருந்து தம்மை விலக்க ஊழியர் மகஜர்

யாழ்.மாநகரசபை ஊழியர் நலன்புரிச்சங்கத்தினால் தங்களுக்கான சலுகைகள் வழங்கப்படுவதில்லை எனவும் -

சங்கத்தினால் நடாத்தப்படும் பொது நிகழ்வுகளில் ஊழியர்கள் பங்கு கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை எனவும், இதனால் தங்களை ஊழியர் நலன்புரிச் சங்கத்திலிருந்து விலக்கிக் கொள்ளுமாறு கோரி, மேற்படி சங்கத்தின் தலைவருக்கு அங்கத்தவர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

மேலும், அம்மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, சங்க விதிமுறைகள் மாற்றி அமைக்கப்பட்டு வருவதாயின் அதுபற்றி சங்க அங்கத்தவர்களுக்கு அறியப்படுத்த வேண்டும்.

2002 ஆம் ஆண்டு ஒவ்வொரு அங்கத்தவர்களிலும் இருந்து கழிக்கப்பட்ட பணத்தை மாவீரர் துயிலும் இல்லப் புனரமைப்பு வேலைகளுக்கு வழங்கும்படியும், 2001 ஆம் ஆண்டுக்கு முன்பு தங்களிடம் இருந்து அங்கத்தவர் பணமாக அறவிடப்பட்ட முழுப்பணத்தையும் திருப்பித் தந்துதவும்படியும் கேட்கப்பட்டுள்ளது.(13)

# மர்மப்பொருள் வெடித்துக் காயம்

வீட்டு வளவினுள் இருந்த குப்பைகளுக்கு நெருப்பு வைத்து எரித்தவர், அதனுள் இருந்த மர்மப்பொருள் வெடித்ததில், வலது காலில் படுகாயமடைந்தநிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் புத்தூர் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த முருகன் குலேந்திரன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

(60)

# நீர் தொடர்பான கருத்தரங்கு

நீரும், நீர் விரயமாதலைத் தடுத்தலும் என்பது தொடர்பான கருத்தரங்கு, இன்று காலை 11.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழக பாதுகாப்பு பொறியியல் பிரிவுப் பேராசிரியர் எஸ்.விக்னேஸ்வரன் கருத்துரை வழங்குவார்.

(ச,கி)

# சாரதி அனுமதிப் பத்திரத்தை அங்கவீனர்களும் பெறலாம்

## மோட்டார்வாகன பதிவு அதிகாரி தெரிவிப்பு

சாரதி அனுமதிப்பத்திரம் - அங்கவீனர்கள் மற்றும் வலுவிழந்தோருக்கும் வழங்கப்படும் என்று மோட்டார் வாகன பதிவுத்திணைக்கள உதவி ஆணையாளர் க.பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்று, வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாண வீதிப்போக்குவரத்துப் பொலிசாரால் நடாத்தப்பட்ட போக்குவரத்து ஒழுங்குமுறைகள்' தொடர்பான கருத்தரங்கின் இறுதியில், யாழ். மாவட்ட சிற்றூர்திச் சங்கத் தலைவர் எழுப்பிய வினாவிற்கே ஆணையாளர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், சாதாரண சாரதி அனுமதிப்பத்திரம் இவர்களுக்கு வழங்க முடியாது என்றும், இவர்களின் உடல்நிலைக்கு ஏற்ப வாகனம் ஓட்டுவதற்கு தகுதியானவர்கள் என மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்படுமானால் அவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். அத்துடன், அவர்களது உடல் இயைபுக்கேற்ப ஓட்டும் வாகனம் சீர்செய்யப்பட்டிருப்பதும் அவசியம் என்றார்.

அத்துடன் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் 18 வயதிற்கு மேல் இருப்பதுடன் தேசிய அடையாள அட்டை, பிறப்புச்சான்றிதழ் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்றும் கூறினார்.

(கி,ச)

# மருதங்கேணி வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லை!

(பளை)

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கு இதுவரை நிரந்தர வைத்தியர் இன்னும் நியமிக்கப்படவில்லை. இதனால் இப்பிரதேச மக்கள் வைத்தியசேவை பெறுவதற்கு மிகுந்த சிரமம் அடைகின்றனர்.

தற்பொழுது இங்கு இடம்பெறும் அரச வைத்தியசேவை வாரத்தில் இரு நாட்களே இடம்பெறுகின்றது. இது போதுமானதாக இல்லையென அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை இது வரை புனரமைக்கப்படவில்லை. இதற்கான பணியை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று விரைவில் செய்யவுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மேலும் இப்பகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் இதுவரை கடமை ஏற்கவில்லை எனவும் கூறப்படுகின்றது.

ஆனாலும், தற்பொழுது இப்பகுதி மக்களுக்கு வைத்திய சேவையை, தியாகி திலீபன் வைத்தியசாலை ஊழியர்கள் தொடர்ந்தும் நாளாந்த சேவையாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(115)

# பயிற்சி நெறி விரைவில் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டுவரும் தொழில் முயற்சியாண்மையின் பதினோராவது பயிற்சி நெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மாவட்ட தொழில் திணைக்களமும், யாழ்.பல்கலைக்கழக தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி நெறி அலகும் இணைந்து இப்பயிற்சி நெறியை ஆரமபிக்கவுள்ளன.



யாழ். வந்திருந்த கொழும்பு மாநகரசபையின் பிரதிமேயர் அசாத் சாலி, அமைச்சர் மகேஸ்வரன் மற்றும் நடிகவேள் எம்.ஆர்.ராதாவின் மகன் ராஜு ராதா ஆகியோர் நமது ஈழநாடு பணிமனைக்கு வந்திருந்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இராணுவத்தை வெளியேறக் கேட்கவில்லை மக்களை மீளக்குடியமர்த்தவே கோரினோம்

## தொலைக்காட்சிப் பேட்டியில் பாலா

(கொழும்பு)

வடபகுதியில் இருந்து இராணுவத்தை முழுமையாக வெளியேறும்படி நாம் கேட்கவில்லை. இடம்பெயர்ந்த பத்து லட்சம் மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கும்படியே நாம் கேட்கிறோம்.

இவ்வாறு கொழும்பில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

மக்களை மீளக்குடியமர அனுதிக்கும்படி நாம் கூறியதை ஜனாதிபதியும் கதிர்காமரும் திரிவுபடுத்தியும் இவ் விடயத்தை பெரிதுபடுத்திக் காட்டி விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைய நினைப்பது நியாயமற்ற விடயம்.

எமது ஆயுதங்கள் இவ்வாறு கையளிக்கப்பட்டால் அதன் விளைவு எவ்வாறு அமையும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்றும் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

இதன்மூலம், ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக இருந்து வருகிறார். சமாதானம் தொடர்பாக ஜனாதிபதி கடும் போக்கை கடைப்பிடித்து வருகிறார்.

எதிர்காலத்திலும் இவரின் போக்கில் எதுவித மாற்றமும் இருக்காது என்றும் நாம் எதிர்பார்க்கிறோம். பத்து வருடங்களுக்கு மேலாக, சுமார் பத்து இலட்சம் மக்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களில் தங்கியிருக்க முடியாது.

அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும். இவ் விடயத்தில் இராணுவம் அர்த்தமில்லாமல் அச்சம் கொண்டுள்ளது.

புலிகளின் கனரக ஆயுதங்கள் அனைத்தும் வன்னிக்காடுகளுக்குள்ளேயே வைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் யாழ்ப்பாணத்துக்கு நகர்த்துவது சாத்தியமற்ற விடயம். அப்படி எதுவும் நடைபெறாது.

இவற்றைவிட படைகள் விலக்கப்பட்டால் புலிகளின் நிர்வாகம் அப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுவிடும் என்றும் அரசு அச்சம் கொண்டுள்ளது. இதுவும் அர்த்தமற்றதாகும். வன்னியில் கூட அரசின் நிர்வாக அலகுகள் இப்பொழுதும் செயற்பட்டுக் கொண்டுதான் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் மே மாதத்தில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின்போது வட-கிழக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு நடவடிக்கை தொடர்பான செயற்திட்ட அறிக்கைகள் சிலவற்றை விடுதலைப் புலிகளும், ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு நடவடிக்கை தொடர்பான செயற்திட்ட அறிக்கைகளை அரசும் சமர்ப்பிக்கவுள்ளது.

மேலும், தற்போதைய சமாதான முயற்சிக்கு இராணுவத்தைப் பயன்படுத்தி தடைகளையும், முட்டுக்கட்டைகளையும் போடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அன்ரன் பாலசிங்கம் அப்பேட்டியில் தெரிவித்தார்.

(01)

# யாழ். கரையோரப்பகுதி சுகாதாரச் சீர்கேடு

# கொழும்பு பிரதி மேயர் குழுவினர் ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)


யாழ்.கரையோரப் பிரதேசங்களில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதற்காக, கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

இக்குழுவினர் - ஆரியகுளம், தேவரில் குளம் மற்றும் குருநகர் கரையோரப் பகுதிகள், திருநகர் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து, இப்பகுதிகளில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள் பற்றி ஆராய்ந்ததுடன் அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடினர்.

இவ்விஜயம் குறித்து கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயர் அசாத சாலி கருத்துத் தெரிவிக்கையில்,

இப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் துன்பதுயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். இப்பகுதி பெரும் சுகாதாரச் சீர்கேட்டுக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இந்நிலை நீடிக்குமானால் மக்கள் நோய் வாய்ப்பட்டு உயிரிழக்க நேரிடும்.

எனவே, நாம் இவை குறித்து உரிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து குறிப்பாக - இப்பகுதி ஒவ்வொன்றிலும் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து, அதில் எமது திட்டங்களை உள்ளடக்கி, அறிக்கையின் பிரதிகளை புனர்வாழ்வு அமைச்சுக்கும், வீடமைப்பு அமைச்சுக்கும், இந்து விவ



கார அமைச்சுக்கும் மற்றும் பல வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புகளுக்கும் சமர்ப்பிப்போம்.

இவை குறித்து நாம் கவனமெடுத்து எம்மாலான உதவிகளைச் செய்வதற்குத் தயாராகவுள்ளோம். இச்செயற்பாடுகளுக்கு யாரும் நிதியுதவியளிக்கும் பட்சத்தில எமது ஊழியர்களையும், இயந்திரங்களையும் இங்கு கொண்டு வந்து இப்பகுதிகளைச் சுத்தம் செய்வதற்கு நாம் தயாராகவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இவ்விஜயம் குறித்து அமைச்சர் மகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், இப்பகுதிகளைச் சுத்தம் செய்வதற்கும் மற்றும் பல அடிப்படைச் சுகாதார சேவைகளையும் மேற்கொள்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதியுதவி அளிப்பதற்கு தயாராகவுள்ளார்.

பார்வையிட்ட இடங்களில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்தும் மற்றும் இப்பகுதியை அபிவிருத்தி செய்வது குறித்தும் அறிக்கையொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

இதற்கென ஒரு புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்து ஓர் கால எல்லைக்குள் இப்பகுதிகளை மற்றும் குளங்களையும், சுத்தம் செய்வதுடன் புனரமைக்கவும் உள்ளதாகத் தெரிவித்தார்.

கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயருடன், மாநகரசபை உறுப்பினர்களான ராம் மற்றும் பிரேம ஜெயந்த ஆகியோரும் கொழும்பு வைத்தியர் ருவன்எல் விஜேயமுனி மற்றும் பொறியியலாளர் ஒருவரும் கொழும்பிலிருந்து வருகைதந்த னர்.

(லி)

# உதைபந்தாட்டப் போட்டியில் மோதல் காயமுற்ற நால்வர் வைத்தியசாலையில்

துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று மாலை, நாவாந்துறை சென். நீக்கிலஸ் - சென்.மேரிஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டம் கைகலப்பாக மாறியதில் படுகாயமடைந்த நால்வர் யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மைதானத்தில் ஆரம்பித்த மோதல் நாவாந்துறையில் பெரும் கோஷ்டி மோதலாக மாறியது. இச்சம்பவத்தில் செல்வராசா றேமன் (வயது-35), சவரிமுத்து பிரசாந் (வயது-23), ரஞ்சன் ஜெயக்குமார் (வயது-22) பெனடிக் ஜெமிலன் (வயது-25) ஆகியோரே படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலும் பலர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள். (111)

### சமாதான...

என்று தெரிவித்த அவர் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா இடையூறு விளைவிக்கின்றது என்ற குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான விடுதலைப் புலிகளின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் எமக்குத் தெரிவித்திருக்கின்றது.

அந்தப் பிரதேசங்களிலிருந்து ராணுவத்தை எவ்வாறு அகற்ற முடியும் என்றும், அவ்வாறு அகற்றும் பட்சத்தில் ராணுவ சமநிலையில் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாதா என்பது குறித்தும் இலங்கை அரசாங்கம் எம்மிடம் ஆலோசனை கேட்டிருக்கின்றது என்று தெரிவித்த அமைச்சர், அது குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு எத்தகைய அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை என்றும் கூறினார்.

இருந்தாலும், அது தொடர்பாக இலங்கை ராணுவத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு இந்திய ராணுவ ஜெனரல் சதீஸ் நம்பியார் நியமிக்கப்பட்டிருக்கின்றார் என்று தெரிவித்த அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, அதற்காக இந்தியா சமாதான முயற்சியில் பங்குகொள்ளுகின்றது என யாரும் அர்த்தம் கற்பிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார் .

### தமிழக...

இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் நடைபெறவிருந்த இக்கூட்டம் பிற்போடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### தமிழ்ச்செல்வன்...

கேணல் கருணா கொழும்பில் இருந்து சிறிலங்கா வான்படையின் உலங்குவானூர்தி மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சென்றடைந்தார்.

### கேணல் கிட்டு...

உட்பட பத்து வேங்கைகளின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

### இந்தியா...

யாக என்ன தேவையென்று இனித்தான் தீர்மானிக்க வேண்டும். சமாதான காலத்திலான பாதுகாப்பு விவகாரம் தொடர்பாகவும் ஆராய்வதில் உதவி செய்யுமாறு இலங்கை அரசு என்னைக் கேட்டுள்ளது. மற்ற ஏற்பாடுகள் பற்றிக் கருத்துக்கள் கூறக் காலம் கனியவில்லை.

இப்போது உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக ஆலோசனை பெற்றுத்தருமாறு கேட்டுள்ளார்கள்.

நான் இந்திய அரசின் பிரதிநிதியாகச் செல்லவில்லை. நிச்சயமாக இந்த விவகாரம் பற்றி இந்திய அரசிடம் கருத்துக் கேட்கப்பட்டிருக்கும். இலங்கை செல்வது எனது தனிப்பட்ட முறையில்தான்.

இலங்கை அரசுக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்களுககு நான் ஆலோசனை வழங்குவேன். ஆனால், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பிரச்சினையில் நான் சம்பந்தப்படாமல், இராணுவத்தில் உள்ள நான், இராணுவ விடயங்கள் பற்றி ஆராய வேண்டும். இராணுவம் தொடர்பான விவகாரம் அங்கிருக்கும் ஆயுதப்படைகள் விவகாரம் பற்றி ஆராய்வதற்கு இராணுவ ஆய்வு தேவைப்படும்.

சர்வதேச தரத்தில் - முன்னர் யூகோஸ்லாவியா நாட்டின் ஐ.நா படைப்பிரிவின் தலைவராகப் பணியாற்றியதால் என்னிடம் அந்த அனுபவ அடிப்படையில் ஆலோசனை கேட்கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

### பாதுகாப்பு...

வும் இங்கு இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தலாம் எனவும், யாழ். குடாநாட்டு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வட-கிழக்கை...

கருத்திலெடுக்கப்பட்டன

ஆறாவது கட்டப் பேச்சுக்களை- இவ்வருடம் மார்ச் மாதமளவில் ஜப்பானில் நடத்துவது பற்றி அகாஷி நேற்றைய பேச்சுக்களில் உறுதி செய்துள்ளார்.

இவ்வேளை - எதிர்வரும் 16 ஆம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவிருக்கும் வட-கிழக்கு உடனடி மனிதாபிமான, புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுக் கூட்டத்திலும் யசுஷி அகாஷி இடம்பெறவுள்ளார்.

இதன்பிறகு, அடுத்தமாதமளவில் தலைவர் வே.பிரபாகரனையும் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தையும் அவர் வன்னியில் சந்திக்கவுள்ளார்.

# மரண அறிவித்தல்

## சபாபதி நாராயணன் (சபா)

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)**

பண்டத்தரிப்பு, வடலியடைப்பைச் சேர்ந்த சபாபதி நாராயணன் அவர்கள் 11.01.2003 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி - பாக்கியம் தம்பதியினரின் மகனும், தருமலிங்கம், சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மருமகனும், பத்மாவதியின் (திருமண, பிறப்பு, இறப்பு பதிவாளர் - பண்டத்தரிப்பு) அன்புக் கணவரும், அருள்மொழி, வசந்தமொழி, கயல்மொழி, காந்திமதி, சித்தார்த்தன், ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற சிவநேசன், மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற சிவசம்பு, பேரின்பநாயகம் (லண்டன்), பாலச்சந்திரன் (லண்டன்), பாக்கியநாதன் (சீமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கண்மணி, செல்வரத்தினம், இராஜி, பகீரதி, செல்வமலர், பத்மநாதன், கமலாவதி, கலாவதி, சோமஸ்கந்தராசா (சுவிஸ்) ஆகியோரது மைத்துனரும், நேசமலர், பத்மராஜா, நகுலேந்திரன் சிவாஜினி ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், சரவணமுத்து, சௌந்தரம், காலஞ்சென்ற சரஸ்வதி, கண்மணி ஆகியோரின் கிட்டிய உறவினரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.01.2003 திங்கட்கிழமை (இன்று) மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் விளாவெளி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

*பிள்ளையார் கோயிலடி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*

(சி-475)

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

வாசகர்களே, வாடிக்கையாளர்களே

நமது ஈழநாட்டில் விளம்பரம்
செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே
இனி எமது விளம்பர முகவர்!

நமது ஈழநாடு விளம்பர முகவர்




பொ.அனுரா
டிலெக்ஸ் ரெலிகொம்,
இல 24, K.K.S வீதி,
சுன்னாகம்..



தொலைபேசி இல. 021-222 3568
021-222 3569, 0777-722661
தொலைநகல் இல. 021-222 3568

திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்
நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்
ஆர்கொலோ சதுரர்
- நடன நாடகம்
இன்னும் இரு வாரங்களில்
STP Graphics

விளம்பர அனுசரணை நமது ஈழநாடு

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.